REGISTERED AS A CATHOLIC WEEKLY (P 197) Established 19 Feb 1876

# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர் 124
இதழ் 17
30 ஐப்பசி 1999
விலை ரூபா 5

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள்

## இராணுவத் தலைமையகத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மத்தியில் மன்னார் ஆயர்

"நானும் யாழ்ப்பாண, திருமலை-மட்டு நகர் ஆயர்களும் செப்ரெம்பர் 20-22ஆம் திகதிகளில் இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிக்குச் சென்றபோது விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர்களைச் சந்தித்து உரையாடியபோது, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அவர்களுக்கு விருப்பம் இருப்பதாகத் தெரியவந்தது. அரசுக்கு இத்தகைய கருத்து இருக்குமானால் அதற்குரிய அறிகுறிகளைக் காட்டி ஆரம்ப முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் எதிர்பார்க்கின்றனர்"

இவ்வாறு மன்னார் ஆயர் பேரருட்திரு இரா. யோசவ் அவர்கள் இராணுவத் தலைமையகத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா ஆகியோருடன் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

ஆயர் மேலும், தாம் முல்லைத்தீவு மாவட்டத்தில் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகிய மந்துவில் சந்தையை தரிசித்ததாகவும், அவ்விடத்தில் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்குள் புலிகளின் நிலையம் எதுவும் இல்லையென்றும், பாதிக்கப்பட்டவர்கள் இடம்பெயர்ந்து குடிசைகளில் வாழ்ந்த ஏழை மக்களே என்றும், காயமடைந்த 47 பேரில் பலருக்கு வைத்தியஉதவி தேவைப்பட்டும் போதிய அம்புலன்ஸ் சேவை இல்லாததாலும் மாங்குளப் பாதை மூன்று நாட்கள் மட்டும் திறந்திருப்பதாலும் அவர்கள் சிகிச்சை பெறமுடியாமல் முல்லைத்தீவு வைத்தியசாலையில் இருப்பதாகவும், அமைச்சருக்கு எடுத்துரைத்தார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## மனித உரிமைகளுக்காக உழைக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது

–சட்டத்தரணி அருள்திரு வி. யோகேஸ்வரன் யே.ச.

தமது குருத்துவப் பணிகளுடன் சட்டத்துறையில் புலமைபெற்று சட்டத்தரணியாக கொழும்பு நீதிமன்றில் பணியாற்றும் இயேசுசபையைச் சேர்ந்த அருள்திரு வி. யோகேஸ்வரன் அடிகளாரிடம் எமது கொழும்பு நிருபர் டெனிஸியா வழியாக பேட்டி கண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "1999ஆம் ஆண்டிலிருந்து எனது சபையினர் சட்டத்தரணி பணியைச் செய்ய முழுமையாக அனுமதித்துள்ளனர். மனித உரிமைகள் மேம்பாட்டிற்காக உழைக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இப்பணி தவிர்ந்த நேரங்களில் குரு என்ற வகையில் ஏனையவர்களை இப்பணிக்கு ஊக்குவிப்பதுடன், எனது கருத்துக்களைப் பகிர்ந்தும் வருகிறேன். 'இயேசு சபை அகதிகள் சேவை' எனது பணியில் கரிசனை காட்டி வருகிறது. மனித உரிமைகள் மறுக்கப்பட்ட, அதனைப் பெற்றுக்கொள்வதற்காக அதிக பணத்தை விரயமாக்குகின்ற தமிழ் மக்கள் பலருக்கு எனது பணி பெரிதும் உதவுமென நம்புகிறேன்" என்றார். இவரது பேட்டியின் முழுமையை இரண்டாம் பக்கத்தில் காணலாம்.

## மரியன்னை பேராலய சேமக்காலையை புனிதமாகப் பேண நடவடிக்கை எடுங்கள்

### மாநகர சபை ஆணையாளருக்கு பேராலயப் பங்குத்தந்தை வேண்டுகோள்

யாழ் மரியன்னை பேராலய பங்குத்தந்தை ஏ.சி. கிறிஸ்தோபர் அடிகள் மாநகரசபை ஆணையாளருக்கு மரியன்னை பேராலய சேமக்காலையை புனிதமாகப் பேணுவதில் ஏற்பட்டுள்ள இடையூறுகளைச் சுட்டிக் காட்டி உடன் நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

25 ஆனி 1999இல் ஆணையாளருக்கு எழுதப்பட்ட கடிதத்திற்கு எந்தவித பதிலையோ, நடவடிக்கையையோ காணாத நிலையில் இரண்டாவது மடலையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் மனித உரிமை மீறல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

### சர்வமதக் குழுவிடம் மன்னார் ஆயர்

சர்வமதக் குழுவைச் சேர்ந்த வண. கும்புறுகமுவ வஜிர தேரர், வண. சோமானந்த தேரர், அருட்திரு அன்ரனி சிறில் ஆகியோர் மன்னாருக்கு விஜயம் செய்து ஆயர் இல்லத்தில் மன்னார் ஆயர் இராயப்பு யோசவ் அவர்களைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர், போரினால் பொது மக்கள் மடிந்துகொண்டிருக்கிறார்கள். கொல்ல வேண்டியது மக்களையல்ல. அவர்களிடமிருக்கும் தப்பான சில மனக்கொள்கைகளையே. அப்போது தான் சமாதானம் எமது மண்ணில் மிளிரும் என்றார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## வன்னிக்கான பாதை எப்போதும் மூடப்படும் அபாயத்திலுள்ளது

–அருட்திரு ஜேம்ஸ் பத்திநாதர்

அண்மையில் கொழும்பு வந்துள்ள ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கிளி-முல்லை மறைக்கோட்ட நிலை பற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "கிளி-முல்லை மறைக்கோட்ட நிலையில் பெரிய முன்னேற்றம் இல்லை. பாதை எப்போதும் மூடப்படும் அபாயத்தில் உள்ளது. இதனால் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்" என்று கூறிய அவர் இதற்குப் பல காரணங்களை முன்வைத்தார்.

- ஒலுமடு, அம்பகாமம் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை தொடங்கியுள்ளமை.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## திருத்தந்தையின் இந்திய விஜயத்திற்கு குண்டுதுளைக்காத வாகனம்

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதியிலிருந்து 8ஆம் திகதி வரை இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பது தெரிந்ததே. இந்த விஜயத்திற்குப் பாவிப்பதற்கென குண்டு துளைக்காத வாகனமொன்று விமானமூலம் புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஆயுதங்களால் சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாது

### 33வது உலக சமாதான தினச்(01.01.2000) செய்தியில் திருத்தந்தை

'இறைவன் அன்புகூர்வோர்க்கு உலகில் சமாதானம்' என்பதே உலக சமாதான தினத்திற்கான திருத்தந்தையின் செய்தியின் கருப்பொருளாகும். யூபிலி ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே சமாதானத்தைக் கட்டியெழுப்ப உழைக்குமாறு திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார். "துரதிஸ்டவசமாக இரண்டாவது மிலேனியத்தின் இறுதிப் பகுதி உலகின் பல பாகங்களில் வேதனைதரும் கொடிய போராட்டங்கள் நிறைந்ததாக அமைந்துவிட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிப் பொதுமக்களே. முரண்பாடுகளை நீக்கும் ஒரேவழியாகக் கருதப்படும் போரை [illegible] இந்த மாபெரும் யூபிலியின் போது ஆழ்ந்த [illegible] அர்ப்பணமும் தேவை. சமாதானத்தைக் கட்டியெழுப்ப ஆயுதங்கள் உதவா. போராட்டங்களைத் தவிர்த்து மக்களிடையே சமாதானத்தை நிலைக்கச்செய்ய வேறுவழிகள் கண்டுபிடிக்கப்படவேண்டும். சமாதானத்தை ஏற்படுத்த ஆயுதப் போராட்டத்தை நிறுத்திவிட்டால் போதாது. சமுதாய வாழ்வின் பல்வேறு அம்சங்களாகிய அபிவிருத்தி, பொருளாதாரம், மனித உரிமைகள், இயற்கைப் பாதுகாப்பு அனைத்தையும் உள்ளடக்கியதுதான் சமாதானம். வறுமையை ஒழிக்காமல், அனைத்து மக்களின் முழுமையான அபிவிருத்தி இல்லாமல் ஏற்படும் [illegible] நிலையற்றது" என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### நினைவுச் சின்னங்களைப் பேணுவோம்

இறப்பு என்பது மனித வாழ்க்கையில் தவிர்க்கப்பட முடியாததொன்று. இவ்வுலகில் வாழ்கின்ற அனைவரும் என்றோ ஒருநாள் இறக்க வேண்டும். இது உலகறிந்த உண்மை. இருப்பினும் எம்மோடு வாழ்ந்தவர்கள், எம் உறவில் கலந்தவர்கள், அன்பைப் பகிர்ந்தவர்கள், அனுபவங்களில் ஒன்றானவர்கள் திடீரென எம்மைவிட்டுப் பிரியும்போது நாம் ஆடிப்போய் விடுகிறோம். வேதனையில் துடித்துநிற்கிறோம். குறிப்பாக அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகின்றபோது இறைவனிடமே நீதிகேட்டுத் தோற்றுப்போய்விடுகிறோம். இவர்கள் விட்டுச்செல்கின்ற பொருட்களும் அன்புறவும் கால ஓட்டத்தில் அழிந்தோ அர்த்தமற்றோ போய்விடலாம். இறுதிவரை அவர்களின் நினைவுச் சின்னங்களாக நிலைத்திருப்பது அவர்களின் புதைகுழிகளே. இந்த சேமக்காலைகள் புனித இடங்களாக என்றும் பேணப்படவேண்டும்.

யாழ்நகர் வாழ் கத்தோலிக்க மக்கள் அனைவருக்கும் தொன்றுதொட்டு சேமக்காலையாக விளங்கிவருவது புனித மரியன்னை சேமக்காலையாகும். இந்த இடத்தை அழகாகவும் புனிதமாகவும் பேணிப் பாதுகாக்கவேண்டியது கத்தோலிக்கர் ஒவ்வொருவரதும் பொறுப்பான கடமையாகும். கார்த்திகை மாதத்தில் மட்டும் அதுவும் நேரம் கிடைத்தால் சேமக்காலைக்கு வந்துபோவதோடு எமது கடமை முடிவதாயின் இறந்தவர்களோடு நாம் வைத்திருந்த அன்பும் உறவும் முடிந்ததாயே கருதப்படவேண்டும்.

யாழ் மரியன்னை சேமக்காலை சரிவரப் பராமரிக்கப்படாமல் பாழடைந்து புதர்கள் மண்டிக் காணப்படுவது ஒருபுறமிருக்க அயலில் இருப்பவர்கள் அவ்விடத்தை சரிவரப் பராமரிக்காமல் விடுவதுடன் அசுத்தம் செய்வதாகவும் பேராலயப் பங்குத்தந்தை வேதனையோடு மாநகரசபை ஆணையாளருக்கு முறையிட்டுள்ளார். மாநகர சபையினர் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் இவ்விடத்தின் மாண்பைப் பேணவும் புனிதமாக வைத்திருக்கவும் தமது கடமையைச் செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இவ்விடத்தின் மேன்மையைப் பேண பின்வரும் நடவடிக்கைகளை கவனத்தில்கொள்வது சிறந்ததெனக் கருதுகிறோம்.

☆ இச்சேமக்காலையை பயன்படுத்தும் அனைத்துப் பங்குகளையும் உள்ளடக்கிய குழுவொன்று பேராலய பங்குத்தந்தை தலைமையில் அமைக்கப்பட்டு சேமக்காலையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுத்தல்.

☆ இடநெருக்கடியையும் இன்றைய தேவையையும் கவனத்தில் கொண்டு நகரின் வேறு இடங்களிலும் சேமக்காலைகளை அமைக்க நடவடிக்கை எடுத்தல். அரியாலை, கொழும்புத்துறை பகுதிகளில் இதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு.

எம் அன்புக்குரியவர்களின் புதைகுழிகளைப் புனிதமாகப் பேணுவோமாக.

# மக்களுடைய உரிமைகளுக்காக உழைப்பது கிறிஸ்துவின் பணியைப் பூர்த்திசெய்வதாகும்

### சட்டத்தரணி அருள்திரு V. யோகேஸ்வரன் S.J. மனந்திறந்து கூறுகிறார்

**குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டதில் இருந்து உங்கள் பணி வாழ்வை சுருக்கமாகக் கூறுவீர்களா?**

நான் குருவாக 1982ஆம் ஆண்டு கொழும்பில் திருநிலைப்படுத்தப்பட்டேன். சிறிதுகாலம் பங்குப் பராமரிப்பில் ஈடுபட்டேன். ஏனைய காலப் பகுதியில் இளைஞர்களுக்கான கருத்தரங்குகள், ஞான ஒடுக்கங்கள், சமூக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றில் ஈடுபட்டேன். இவற்றோடு இயேசுசபை மாவட்ட நிர்வாகியாக பெரும்பாலான ஆண்டுகளைக் கழித்தேன்.

**சட்டத்தரணியாக வரவேண்டும் என்ற ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன?**

நான் சட்டத்தரணியாக மாறியது சந்தர்ப்பவசத்தால். 1983ஆம் ஆண்டு நிறைவுபெறாத நிலையிலிருந்த கலைமாணிப் பட்டத்தின் இறுதித்தேர்வை பூர்த்திசெய்ய முற்பட்டேன். ஆனால் இனக்கலவரத்தின் நிமித்தம் அது கைகூடாமல் போய்விட்டது. அக்காலப் பகுதியில் சட்டக் கல்லூரி விண்ணப்பங்களைக் கோரவே, எனது சபை முதல்வர் அதற்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார். எனவே நானும் சட்டக்கல்லூரியில் சேர்ந்து 4 வருடங்கள் பயின்று 1987ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டேன்.

**குருத்துவப் பணிக்கும் சட்டத்தரணித் தொழிலுக்கும் தொடர்பு உள்ளதாகக் கருதுகிறீர்களா?**

1979ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த பயங்கரவாத தடுப்புச் சட்டம் முதற்கொண்டு தொடர்ந்துவந்த ஏனைய அடக்குமுறைச் சட்டங்கள் எமது மக்களின் மனித உரிமைகளைக் கபளீகரம் செய்தன, செய்கின்றன. சுதந்திரத்திற்கான அழைப்பு என்பது கிறிஸ்துவிடமிருந்து வரும் அழைப்பு. மக்களுடைய உரிமைகளுக்கும், விடுதலைக்கும் உழைப்பது கிறிஸ்துவின் பணியை பூர்த்திசெய்வது ஆகும். அதுவே என் குருத்துவத்தின் அழைப்பும் ஆகும்.

மேலும் இந்த இடத்தில் இன்னுமொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். நான் ஆஜராகும் வழக்குகள் மனித உரிமைமீறல் வழக்குகள். அத்தோடு இலவசமாகவே ஆஜராகிறேன். காணி, விவாகரத்துப் போன்ற குடியியல் வழக்குகளில் (Civil Cases) நான் ஆஜராவது இல்லை.

**சட்டத்தரணியாக பணிபுரிய முற்படுகையில் உங்களுக்குக் கிடைத்த வரவேற்பு எவ்வாறு இருந்தது?**

திருச்சபையின் பணியையும் துறவற சபைக்குள் அதன் பணியையும் புரிந்துகொள்வது இலகுவானதொன்றல்ல. நான் ஒரு இயேசுசபைக் குரு. அத்தோடு நான் மாத்திரமே இலங்கையில் சட்டத்தரணியாக தொழில்ரீதியில் பணிபுரிந்து வருகின்றேன். இந்தவகையில் இது ஒரு முன்னோடி முயற்சி என்பதுடன் தற்போதைக்கு தனித்தே நிற்கவேண்டிய கட்டாயமும் உண்டு.

நான் சத்தியப் பிரமாணம் எடுத்த சமயம் என்னைச் சட்டம் பயில அனுப்பிய முதல்வர் மாற்றப்பட்டுவிட்டார். தொடர்ந்துவந்த முதல்வரால் எனது பணியையும் தொழிலையும் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியதாயிற்று.

1991ஆம் ஆண்டு இறுதி அர்ப்பணிப்பை சபைக்கு அளிப்பதற்குத் தயார்ப்படுத்தும் பயிற்சிக்காக பிலிப்பைன்ஸ் நாடு செல்லவேண்டியதாயிற்று. இந்த ஒருவருட நிறைவின்பின் மாவட்டப் பரிபாலகராக அனுப்பப்பட்டேன். இது எனது சட்டத்துறை வாழ்வை முழுமையாகக் [illegible] இந்தப் பரிபாலகர் பணி பொழுதில் மூன்று வருடம் நீடிக்கவேண்டியது. எனக்கோ எட்டு வருடங்கள் நீடிக்கப்பட்டது. எனவே என்னால் மீண்டும் 1999ஆம் ஆண்டே சட்டத்துறைக்குள் பிரவேசிக்கமுடிந்தது.

ஒரு துறையில் இருக்கும் புலமை என்பது இறைவனால் அருளப்பட்ட ஒரு கருவி. அவரது மகிமையைப் பறைசாற்ற கடந்த எட்டு வருடங்கள் நேரடியாகச் சட்டத்துறையில் இறங்கமுடியாவிட்டாலும்கூட தேவைப்பட்ட மக்களுக்குச் சட்ட ஆலோசனைகள் வழங்குவதாலும், சட்டப் புத்தகங்களை வாசித்ததாலும் எனது தாகத்தை தணியாத தாகமாக வைத்திருந்தேன்.

*செவ்வி கண்டவர்: டெனிஸியா*

**ஆட்கொணர்வு மனு(HABEAS CORPUS), அடிப்படை உரிமை மீறல் (FUNDAMENTAL RIGHTS) போன்ற வழக்குகளில் ஆஜராகி வரும் நீங்கள் இந்த வழக்குகளின் தன்மைபற்றி விளக்குவீர்களா?**

காணாமல் போனவர்கள் அல்லது தொலைந்து போனவர்கள் தொடர்பாக அரசுக்கு அதிகார ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்படுகிறது. அத்தோடு நீண்டகாலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமல் தடுத்துவைக்கப்படுவோர் தொடர்பிலும் இதனைத் தாக்கல் செய்யலாம். காணாமற் போனதற்கு அரசே பொறுப்பு என்பதைப் பலமான சான்றுகளுடன் எண்பித்தால் நஷ்டஈடு பெறலாம். துரதிஸ்டவசமாக இதற்கு பொறுப்பான தனிப்பட்ட நபர்களை சட்டத்தின்முன் கொண்டுவந்து தண்டனை பெற்றுக்கொடுப்பதே கடினமாக இருக்கிறது. காரணம் சட்டமா அதிபர் காட்டும் தயக்கம்.

சித்திரவதை, சட்டவிரோத கைதுகள், தடுத்துவைத்தல் போன்றவை தொடர்பில் அடிப்படை உரிமைகள் மீறல் வழக்குத் தாக்கல் செய்கிறோம். இதுவும் அரசுக்கு எதிராகவே தாக்கல்செய்யப்பட்டு அரசு பொறுப்பாளியாக காணப்படும் பட்சத்தில், சந்தேக நபர் விடுதலை செய்யப்படுவதுடன் நட்டஈடும் வழங்கப்படும்.

மேற்படி இரண்டுவகை வழக்குகளும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்காகவே தாக்கல் செய்யப்படுகின்றன.

**நீங்கள் தனித்து இயங்குகிறீர்களா? அல்லது வேறு யாரும் சிரேஷ்ட சட்டத்தரணிகளோடு சேர்ந்து தொழில் புரிகிறீர்களா?**

முன்னரே நான் குறிப்பிட்டது போல தனித்தே ஒரு குரு என்ற ரீதியில் இலங்கையில் இப்பணியில் ஈடுபடுகின்றேன். நீண்டகாலமாக மனித உரிமைகள் வழக்குகளைக் கொண்டு நடாத்திவரும் மனித உரிமைகள் இல்லத்தினதும் சட்டத்தரணிகளதும், சட்டத்தரணி திரு. விநாயகமூர்த்தியின் அனுசரணையும் ஆதரவும் வழிகாட்டலும் உண்டு. எனவே அவர்களோடு இணைந்து செயலாற்றி வருகின்றேன்.

**உங்களிடம் வரும் கட்சிக்காரரின் பின்புலம் குறித்துக் கூறுவீர்களா?**

வடக்குக் கிழக்கில் உள்ள பணமோ ஏனைய வசதிகளோ இல்லாத மக்களே அணுகி வருகிறார்கள். அவர்கள் பழைய ஏற்பாட்டின் யாவேயின் மக்கள். பழைய ஏற்பாடு விதவைகள், அனாதைகள், ஏழைகள் ஆகியோருக்காகப் போராட ஆணையைத் தருகின்றது. இவர்களுக்கு இலவச சட்ட உதவிகளை வழங்குகிறோம். "கொடையாகப் பெற்றீர்கள் கொடையாகவே வழங்குங்கள்" (மத். 10: 08).

**சிறைச்சாலைக்கு உங்கள் கட்சிக்காரரைச் சந்திக்க சென்ற சமயம் ஏற்பட்ட, மனதை நெருடக்கூடிய சம்பவமொன்றைப் பகிரமுடியுமா?**

சிறைச்சாலைக்குச் செல்கையில் என்னை மிகவும் பாதிப்பவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்களே. ஒரு மனிதன் எவ்வாறு இன்னுமொரு மனிதனை வதைத்து இன்பம் காண்கிறான் என்பதை ஜீரணித்துக்கொள்ள கடினமாக இருக்கிறது.

மற்றையது நீண்ட காலம் குற்றச்சாட்டு கூட என்னவென்று தெரியாத நிலையில், இரண்டு மூன்று வருடங்கள் விளக்க மறியலில் (Remand Prison) வாடுவது. இதைவிட நாலு, ஐந்து வருடங்கள் என்று போலிக் குற்றச்சாட்டுக்களால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை (Convicted Prisoners) காணும்போது இதயம் கனக்கும். அவர்களுடைய தனிமையும் ஆதங்கமும் என்னை மிகவும் பாதிப்பனவாக உள்ளன.

**சிறைச்சாலைகளில் தமிழ்க் கைதிகளின் நிலை பற்றிக் கூற முடியுமா?**

களுத்துறைச் சிறையில் மாத்திரம் 700க்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் தடுத்து (Detainees) வைக்கப்பட்டுள்ளனர். இதைவிட வெலிகட, மகசின், மகர, போகம்பர, இன்னும்பல இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எல்லோரும் விடுதலை என்ற தேசத்துக்குள் பிரவேசித்து பயமின்றி வாழும் நாளை ஆவலோடு எதிர்பார்த்து நிற்பதோடு மனித மாண்புடனும் கௌரவத்துடனும் கூடிய பொதுவாழ்வை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

**நீதிமன்றத்தில் ஆஜராகும்போது எவ்வித உடை அணிவீர்கள்?**

ரோமாபுரியில் இருந்தால் ரோமானியர் போல் உடை அணியவேண்டும். அதையே நானும் பின்பற்றுகிறேன். எவ்வாறு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறதோ, அவ்வாறே நானும் ஆஜராகின்றேன். அதாவது கழுத்துப்பட்டி (Tie), கோர்ட், குளோக்(Cloak). நான் குருக்களுக்குரிய அங்கியை நீதிமன்றத்தில் அணிவதில்லை.

**நீதிபதிகள், சக சட்டத்தரணிகள், கட்சிக்காரர்கள் உங்களைக் குருவானவர் என்று அறியும்போது உங்களுடனான அணுகுமுறையில் மாற்றம் ஏற்படுகிறதா?**

இது விடையளிக்கச் சிக்கலான கேள்வியாகும். ஆரம்பத்தில் எல்லோர் மத்தியிலும் அதிர்ச்சியும், எனது நோக்கம் குறித்து வினாவும் தொக்கிநின்றது. சட்டத்தரணியும் குருவும் என்ற கருத்தை ஏற்கச் சிரமப்பட்டனர். காலப்போக்கில் எனது பணியின் நோக்கத்தைப் புரிந்துகொண்டபோது வரவேற்பும் உதவிகளும் தாராளமாகக் கிடைத்தன.

**மனித உரிமைகள் என்பது ஒவ்வொரு செயல்களையும் அளக்கும் அளவுகோலாக (Yard stick) மாறிவருகிறது. இது தொடர்பில் திருச்சபை குறிப்பாக தமிழ்த்திருச்சபை காட்ட வேண்டிய கரிசனை எவ்வாறு அமையவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?**

மனித உரிமைகளையும் கௌரவத்தையும் மதிப்பது நவீன காலத்தின் சிந்தனைகளை அளவிடும் ஒரு அளவுகோலாக அமைகிறது. திருச்சபையின் தலைமைத்துவத்தில் உட்கிடையான

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாவலன் நற்செய்தித் தூண்டுதல் போட்டி 1999

வாசகர்களிடம் விவிலிய அறிவை ஊக்குவிக்கும் பொருட்டு மேற்படி போட்டி நடாத்தப்படுகிறது. சரியான விடைகளை அனுப்பிவைக்கும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

*விடைகள் 10.11.99க்குமுன் அனுப்பிவைக்கப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் வந்துசேரும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

முதற் பரிசு ரூ. 100
இரண்டாம் பரிசு ரூ. 50
மூன்றாம் பரிசு ரூ. 25

**இல. 3 : மத்தேயு 11–15**

1. இயேசு திருமுழுக்கு யோவானைப் பற்றிக் கூறிய புகழ் வார்த்தைகள் எவை?
2. பரிசேயர் யேசுவை எவ்வாறு இழிவாகப் பேசினர்?
3. இயேசு கடிந்துகொள்ளும் நகர்கள் எவை?
4. "ஓய்வு நாளில் செய்யக்கூடாததை உம் சீடர்கள் செய்கிறார்கள்"
அவர்கள் செய்த காரியம் என்ன?
5. இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்புப் பெறாத பாவம் எது?
6. இயேசு யார் தமது தாயும் சகோதரரும் ஆவர் என்று கூறுகிறார்?
7. விண்ணரசுக்கு கடுகு விதை, புளிப்பு மா ஆகியவற்றை ஏன் இயேசு ஒப்பிட்டார்?
8. நசரேத் மக்கள் ஏன் இயேசுவை ஏற்றுக்கொள்ளத் தயங்கினர்?
9. சீடர் யேசுவைக் கண்டு பேய் என்று அஞ்சக் காரணமென்ன?
10. "உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறுதுண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே" என்று கூறியவர், இயேசுவிடம் கேட்டது என்ன?

### நற்செய்தித் தூண்டுதல் போட்டி இல.2
### விடைகள்

1. மக்கள் புகழவேண்டுமென்று செபக்கூடங்களிலும் தெருக்களிலும் தம் நற்செயல்களைப் பறைசாற்றும் வெளிவேடக்காரர்.
2. 3 வாழ்த்துக்கள், 4 விண்ணப்பங்கள்
3. நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாமல் தந்தைக்கு மட்டும் தெரியும்படி
4. இறை பராமரிப்பை
5. ஒருவருக்கும் சொல்லாதே. குருவிடம் காட்டி மோயீசன் கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து
6. மத்தேயு வீட்டில் யேசு பாவிகள் ஆயக்காரரோடு பந்தியமர்ந்ததைக் கண்டு பரிசேயர் அவரில் குற்றம் கண்டபோது
7. பிணிகளைக் குணமாக்க, பேய்களை ஓட்ட, இறந்தோரை உயிர்ப்பிக்க, தொழுநோயாளரை நலமாக்க
8. புறவினத்தார், சமாரியருடைய ஊர்களுக்கு
9. சீடர்கள் துன்புறுத்தப்படுவார்கள் என்று காட்ட
10. பிறர் உங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புகின்றவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

### பரிசு பெறுவோர்

1. குணாநந்தன் அன்றூ சஜீவன்
Q/10, சொய்சாபுர தொடர்மாடி, கொழும்பு
2. சுலோஜினி அரியரட்ணம்
16/18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்
3. ஆன் பிரியந்தினி குணநாதன்
பெத்தனி, நவாலி தெற்கு, மானிப்பாய்

*(இவர்கள் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டனர்)*

### பாராட்டுப் பெறுவோர்

1. செ. மரிய கொண்ஸி, பருத்தித்துறை
2. ரொட்றிக் அருட்செல்வம், பருத்தித்துறை
3. கெ. வைமன் றாஜ், பண்டத்தரிப்பு
4. யோ. சறோன் றாஜ், சுண்டுக்குளி
5. அ. றெஜீனா, யூலனூர்
6. செ. அல்பொண்ஸஸ் மடோனா, இளவாலை
7. மேரி அஞ்சலா லோரன்ஸ், பண்டத்தரிப்பு
8. மேரி கிறேஸ் சிங்கராசா, குடாரப்பு
9. எமி ஸ்ரெலா அருளானந்தம், குடாரப்பு
10. இ. பீற்றர் நரேந்திரன், நெல்லியடி
11. ஜெ. எல்மோ, மடுத்தீனார் குருமடம்
12. தி. மரிய கொண்சலீனா, அச்செழு
13. யே. பெனடிக்ற்தாஸ், மானிப்பாய்
14. கி. கிறிஸ்டின் யூலியானா, நாவாந்துறை
15. இ. யோ. யூடினி, யாழ்ப்பாணம்
16. யே. ஜீவராஜ், மானிப்பாய்

மேற்படி போட்டியில் 57 பேர் பங்குபற்றியிருந்தமை பாராட்டுக்கும், மகிழ்ச்சிக்கும் உரிய விடயமாகும். முதல் மூன்று இடங்களைப் பெறுவோரினதும், அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுப் பாராட்டுப் பெறும் 16 பேரினதும் விபரங்கள் மேலே தரப்பட்டுள்ளன. பரிசு பெறுவோருக்குரிய பரிசுகளும், பாராட்டுப் பெறுவோருக்குரிய சான்றிதழ்களும் அனுப்பிவைக்கப்படும். பங்குபற்றிய அனைவருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# உரிமைகள்... உரிமைகளுக்காக..

—அருட்திரு அ. இ. பேணாட்

நாட்டின் நிலைமையைப் பற்றிச் சிந்திக்கும்படி குருக்களும் அருட்சகோதரிகளும் மக்களை உற்சாகப்படுத்திக்கொண்டேயிருந்தனர். மறையாசிரியர்கள் போன்ற பொதுநிலையினரும் அவர்களுக்குத் தோள் கொடுத்தனர். சீற்றம் கொண்ட ஆட்சியாளரும் படையினரும் அவர்களைச் சும்மா விட்டுவிடவில்லை. அல்போன்ஸோ நவரோ என்ற இளம்குரு ஒருவரைக் கொன்றனர். வேறு நால்வரை சித்திரவதைக்குள்ளாக்கி கௌத்தமாலா நாட்டின் எல்லைக்குள் எறிந்தனர். சுவாமி ருட்டிலியோ பணியாற்றிவந்த இடத்தைப் படையினர் ஒரு மாதமாக ஆக்கிரமித்து மக்களை கண்டபடி அடித்துத் துன்புறுத்தி, சிலரை வெட்டியும் சுட்டும் கொன்றனர். அங்கிருந்து அகதிகளாய் வெளியிடங்களுக்கு ஓடிய மக்களுக்கு இல்லிடம் கொடுத்துதவும்படி ஆயர் மக்களை வேண்டினார். அங்கு சென்று அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். "நான் போகுமிடமெல்லாம் திருச்சபை உள்ளாக்கியிருக்கும் கலாபனையின் விளைவாக ஏளனங்களையும் சடலங்களையும் அள்ளியெடுப்பதுதான் எனது வேலையாக இருந்துள்ளது. எம்மைத் தாக்கி இந்த நகரத்தை ஒரு மறியற்சாலையாகவும் சித்திரவதைக்கூடமாகவும் மாற்றியவர்களை மன்னித்து இறைவனிடம் வேண்டுவோம். இறைவன் அவர்களுடைய உள்ளத்தைத் தொடட்டும்" என்று அவர் கூறிய வார்த்தைகள் அங்கு குழுமியிருந்த ஆயிரக்கணக்கானோரின் மனதை ஆழமாகத் தொட்டன.

ஒருபுறம் ஆயர் மன்னிப்பு வார்த்தைகளைப் பேச ·மறுபுறம் அவருடைய மன்னிப்பைப் பெற்றவர்கள் இவரை இம்சிக்கத் தொடங்கினர். அவரைப் பற்றியும் குருக்களைப் பற்றியும் நாளிதழ்களில் தோன்றிய வசைமொழிகள் மோசமாகிக்கொண்டேவந்தன.

அரசாங்கத்தின் மட்டில் தமது அதிருப்தியை தெரிவிக்கும் முகமாக புதிய ஜனாதிபதியின் நியமனச் சடங்குக்கு சமூகம் தர மறுத்துவிட்டார். திருச்சபைக்கும் அரசுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற வேண்டுமாயின் முதலில் ஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி இடப்படவேண்டும். படுகொலை செய்யப்பட்டோர் காணாமற்போனோர் பற்றி கணக்கெடுக்கப்படவேண்டும் என்று திடகார்த்தமாய்க் கேட்டுக்கொண்டார். இவ்வாறு தான் கூறுவது அரசியலல்ல பாவத்திற்கான கண்டனமே என்று விளக்கம் கொடுத்தார். திருச்சபை நடாத்திவந்த வானொலியில் அவருடைய ஞாயிறு மறையுரையைக் கேட்போர் தொகை அதிகரித்தது. அயல்நாடுகளிலும் மக்கள் அவருடைய குரலைக் கேட்கத்தொடங்கினர். நீண்டகாலமாக உண்மை உருக்குலைக்கப்பட்டு அதன் ஆசனத்தில் (பொய்ப்)பரப்புரை அமர்த்தப்பட்டதோர் நாட்டில், ·குரலற்றவர் சார்பாக உண்மையை பறைசாற்றியதே மக்களை அவர்பால் ஈர்த்த சக்தியாகும். தலைநகராம் சான்சல்வடோர் நகரத்துக் குருக்களும் துறவிகளும் பேராயருக்கு ஆதரவாய் இருந்தனர். "பேராயரில் கைவைத்தால் திருச்சபையின் இதயத்தில் கைவைப்பதற்குச் சமன்" என்று ஓர் அறிக்கை விடுத்திருந்தனர். ஆனால் சக ஆயர்களுள் ஒருவரைத் தவிர மற்றைய நான்குபேரும் அவரைப் புரிந்துகொள்ளாது ஐயத்துடன் நோக்கி எதிர்த்து நின்றனர். திருச்சபைக்குள் பிளவு இருந்தது பேராயருக்கு வேதனையைக் கொடுத்தது. பிளவைச் சீர் செய்வதற்கு அவர் எடுத்த முயற்சிகளும் வெற்றியளித்ததாயில்லை. எமது நிலைப்பாடு பயங்கரவாதத்தையோ ஆட்சிப் புரட்சியையோ ஆதரிப்பதல்ல. மக்கள் தமது நியாயமான இலக்குகளை எய்துவதற்கும் தற்பாதுகாப்பிற்குமென நம்மை ஒழுங்கமைப்பது அவர்களுடைய உரிமை என்பதைத்தான் நாம் வாதிக்கிறோம். இந்த வாதத்தையோ நியாயமான கோரிக்கைகளையோ அரசிற்கெதிரான சதி அல்லது பயங்கரவாதம் என்று கூறுவது தவறு என்று விளக்கம் தெரிவித்தார்.

(தொடரும்)

## "மதுமாதா காவியம்"

இளவாலை புலவர்மணி அமுதுவின் "மடுமாதா காவியம்" என்ற நூல் செப்ரெம்பர் 26ஆம் திகதி லண்டன் நல்லிதய ஆலய மண்டபத்தில் வித்துவான் வேலனார் தலைமையில் வெளியிடப்பட்டது. அருள்திரு T.E. தேவராஜன் அடிகள் ஆசியுரை வழங்க, பத்திராசிரியர் திரு. ஈ.கே. இராஜகோபால், புலவர் ந. சிவநாதன், கலைமாமணி முகத்தார் இயேசுரட்ணம், சட்ட நிபுணர் சிறீஸ்கந்தராசா, இலக்கிய மன்ற அமைப்பாளர் திரு. சிவ. தணிகாசலம், பத்திரிசியார் கல்லூரி முன்னாள் ஆசிரியர் திரு. எல்.வி. அன்ரனி ஆகியோருடன் இன்னும் பலர் கருத்துரை வழங்கினர். லண்டன் கலை இலக்கிய மன்றத்தினர் மேற்படி விழாவை ஒழுங்கு செய்தனர்.

## வற்றாப்பளையில் புதிய ஆலயம்

யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் 05.09.99 அன்று வற்றாப்பளையில் முல்லைப் பங்குத்தந்தையின் அயராத முயற்சியினாலும் மக்களின் பூரண ஒத்துழைப்பினாலும் கட்டிமுடிக்கப்பட்ட புதிய ஆலயத்தைத் திறந்து வைத்து சிறப்புத் திருப்பலி நிறைவேற்றினார்.

முல்லைப் பங்குத் தந்தை அருட்திரு தவ்ராஜசிங்கம் அவர்களும் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு யூட் அமலதாஸ் அவர்களும் புதிய வன்னி மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு தேவசகாயம் அடிகளாரும் ஆயருடன் இணைந்து திருப்பலியை நிறைவேற்றினார்கள்.

ஆயர் தமது மறையுரையில் ஆலயம் என்பது இறைவனைச் சந்திக்கும் இடம் என்றும் இப்புனித இடமே அனைவரும் ஏற்றத்தாழ்வு அற்றமுறையில் ஒன்றுகூடும் ஒரே இடமென்றும், இறைவன் எமக்குத்தந்த ஆலயத்தை நாம் புனிதமாகப் பேணுவது போல் எமது நெஞ்சாகிய அழியாத மூவொரு கடவுள் குடிகொள்ளும் நடமாடும் ஆலயத்தை நாம் புனிதமாகப் பேண வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். இறுதியாக புதிய ஆலயத்துக்காகவும் மக்களுக்காகவும் இறையாசீர் வேண்டிச் செபித்ததுடன் பங்கிலுள்ள அனைத்து ஆலயங்களையும் தரிசித்துச் சென்றார்.

செல்வி. வ. ஞானமலர்



## அன்புடன் வாழ்த்துகிறோம்

நல் ஆசானாக, அதிபராக ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி முதல்வனாக அனைத்திற்கும் மேலாக யாழ் மக்களின் ஆயராகத் தொண்டாற்றி இளைப்பாறுகின்ற எமது முன்னாள் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கு யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டமளித்ததை முன்னிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

இறையியல், மெய்யியல், திருமறைச் சட்டம், கல்வியியல், நாட்டுக்கூத்து போன்ற பலவற்றில் பாண்டித்தியம் பெற்றுத் திகழும் எமது இளைப்பாறுகின்ற ஆயருக்கு, எமது வாழ்த்துக்கள்.

புனித வின்சென்ற் டிபோல் சபை
புனித லிகோரியார் இளைஞர் இயக்கம்
ஆலய மேய்ப்புப்பணிச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கண்மணிகள்



| | |
|---|---|
| ஒளி : 10 | எங்கள் விழிகளின் ஒளி யேசு |
| சுடர் : 8 | எங்கள் வாழ்வின் வழி யேசு |

அன்புக் கண்மணிகளே!

அன்புக்கினிய யேசுவின் ஆசிகள் உங்களுள் நிறைவதாக. காவலன் கண்மணிகளைப் படித்துவரும் கண்மணிகளின் கருத்துரைகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

06.10.99இல் மட்டும் ஆசிரியர்களை உங்கள் உள்ளத்தால் போற்றிப் புகழ்ந்ததுடன் உங்கள் பணி முடிந்து விட்டதா? இல்லை. அது உங்கள் வாழ்வோடு இரண்டறக் கலக்கவேண்டும். கண்துடைப்புக்கள் ஒருபோதும் ஆக்கம் தரா என்பதை உணர்ந்து உள் ஆழத்தில் அவர்களைப் போற்றுங்கள்.

அன்பின்
அன்புவிழி

**தேன்துளி :** அகங்காரத்துடன் வாழ்வதில் பெருமை இல்லை. அகங்காரம் இல்லாமல் வாழ்வதில்தான் பெருமை இருக்கிறது.

**சுவாமி கமலாத்மானந்தா**

## சாரணீ (GIRL GUIDES)

"சேவை செய்தாலே வாழலாம் புவிமீதிலே" என்ற வார்த்தை வடிவாக, செயலாக விளங்குவது சாரணீயம். உலகின் எட்டுத் திக்கும் பரந்து, சிறுவர் சிறுமிகளை பெரியோர்களை தம்பால் ஈர்த்து பணிமணம் பரப்பி நிற்கிறது.

இவ்வியக்கத்தின் தந்தை பிரபு றொபேட் பேடன் பவுல் ஆவார். இவர் சாரணீயத்தை 1908ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இவர் எழுதிய "இளைஞர் சாரணீயம்" என்ற நூலைப் படித்த பெண்கள் சிலர் தங்களுக்கும் ஓர் இயக்கத்தை ஆரம்பிக்கும்படி தொடர்ச்சியாகப் பிரபுவை வற்புறுத்தினர். அதனால் பிரபு 1910ஆம் ஆண்டு தன் சகோதரி அக்னஸ் தலைமையின் கீழ் பெண் சாரணீயத்தை ஆரம்பித்தார். இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கத்தை (GIRL GUIDES) சாரணீ என அழைத்தார்.

1912ஆம் ஆண்டு பிரபு பேடன் பவுல் அக்கேடியா என்னும் கப்பல் பிரயாணத்தில் தன் துணைவியைத் தேடிக்கொண்டார். பிரபுவின் துணைவியார் பெயர் ஓவேல் சோமஸ் ஆகும். துணைவியாரும் தன் துணையுடன் சாரணீயப் பணியில் ஈடுபட்டார். 1918இல் பேடன் அம்மையார் (GIRL GUIDES) சாரணீயின் பிரதம சாரணீயாகத் தெரிவானார். 1919இல் அனைத்துலக பேரவையை அம்மையார் உருவாக்கினார்.

இலங்கையில் கண்டி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 1917இல் சாரணீ ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 1921இல் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இது ஆரம்பிக்கப்பட்டது.

கல்விக்கூடங்களில் தன்னம்பிக்கையுள்ள, தான் வாழும் சமூகத்திற்கு நற்பணி புரியும் சிறுவர் சிறுமிகளை சாரணீயம் உருவாக்கி வருகிறது என்றால் மிகையாகாது.

றெ. நிசாணி
(அ. எ. 342)

## ஏட்டில் பதிவோம்

பழமொழிகள்

21. அணில் தள்ளியா தென்னை சாயும்
22. அணுவும் மலையாச்சு தலையும் அணுவாச்சு
23. அணை உடைந்து போன வெள்ளம் அழுதாலும் திரும்பாது.
24. அண்டை வீட்டுக்கடன் ஆகாது.
25. அதிக ஆசை அதிக நட்டம்

## உறவுகள்

நாட்டினுள்ளே வேற்றுமைகள் தோன்றிடவே
நட்புறவு பறவைபோல் பறந்திடவே
ஆக்கிரமிப்பும் அட்டூழியமும் நிறைந்து ஆட்கொள்ள
உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி
உறங்க இடமின்றி அகதிகளாய் இடம்பெயர்ந்து
அந்நிய இடங்களில் குடிபுகுந்து வாழ்வதைவிட
வெளிநாடு சென்றிட முடிவெடுத்து
பெட்டியில் அடைத்த பாம்பு போல
மொழிபுரியா நாடு போய்ச் சேர்வதென்றால்
வேறென்ன இங்கு எளிதாகும்?
வன்னியிலே தாய் தந்தையர்
வெளிநாட்டிலே பிள்ளைகள்
இவர்கள் வேதனைகள் கூறுவதென்றால்
இதயமே வெடித்துவிடும்
கண்கள் சொரியும் கண்ணீரை
கருணைத் தெய்வமே துடைத்துவிடும்
வெந்து நொந்த எம் இதயங்களை
நல் நீதியுடன் கூடிய தீர்வினால் – இறைவா
நன்றாக இயங்கிடச் செய்திடுவீர்

ம. ஷிறோ
அ. எ. 327

# புனித மாக்சிமிலியான் கோல்பே

தொடர் குறுநாவல்

மறைத்திரு மாக்சிமிலியான் இதுவரை போலந்து நாட்டில் மட்டுமே பணியாற்றி வந்தார். ஒருநாள் ஜப்பானுக்குப் போகலாம் என்ற யோசனை அவர் மனதில் தோன்றியது. அதைப் பற்றி அவரது அதிபரிடம் பேசினார். "அங்கு போக உங்களிடம் பணம் இருக்கிறதா?" என்று கேட்டார் அதிபர். "இல்லை". "உங்களுக்கு ஜப்பான் மொழி தெரியுமா?", "தெரியாது"



"அங்கு உங்களுக்கு உதவுவதற்கு நண்பர்கள் இருக்கிறார்களா?", "இல்லை. ஆனால் இறைவனருளால் ஒருவரது நட்பைப் பெற்றுக்கொள்ளலாம்" என்றார் மாக்சிமிலியான் சுவாமியார். பயணத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த மார்செயில்ஸ் என்ற பட்டணத்தில் கப்பல் ஏறித் தன் பயணத்தைத் தொடங்கினார். ஏழ்மை வாழ்க்கை வாழவேண்டும் என்ற ஆவலில், கப்பலில் அவர் தனி அறை எடுத்துக்கொள்ளவில்லை. மாறாக, ஏழைப் பயணிகள் தங்கும் கீழ்த் தளத்திலேயே அவரும் தங்கிக்கொண்டார்.

அங்கே அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருந்தார். பிறருக்கு உதவ எப்பொழுதும் தயாராயிருந்தார். ஓய்வுநேரத்தில் ஜப்பான் மொழியைக் கற்கத் தொடங்கினார். ஜப்பானை அடைந்ததும் பணிபுரிய முனைந்தார். எதிர்பாராத விதமாய் அநேகர் அவருக்கு உதவிசெய்ய முன்வந்தனர். விரைவில் "நாகசாகி" என்னும் நகரில் சிறிய அச்சகம் ஒன்றை நிறுவினார். ஜப்பான் மொழியில் அவரது பத்திரிகை விரைவில் வெளியானது.



அச்சகத்தை அவர் கட்டத் தொடங்கிய பொழுது நகரில் கட்டுமாறு மக்கள் அவருக்கு அறிவுரை கூறினர். ஆனால் அவர் நகரின் மறுபுறத்தில் ஒரு மலைச்சரிவில் பிடிவாதமாய்க் கட்டினார். உண்மையிலேயே மாசற்ற மரியாளின் ஏவுதலால்தான் அவர் அவ்வாறு செய்திருக்க வேண்டும். அமெரிக்கா போர் தொடுத்த போது நாகசாகி நகர்மீது அணுகுண்டு வீசியது. நகர் முழுவதும் அழிந்தது. அவரது அச்சகத்திலோ கண்ணாடிச் சன்னல் கதவுகள் மட்டுமே உடைந்தன.

ஈராண்டுகள் ஜப்பானில் பணிபுரிந்த பிறகு அதைப்போன்ற பணியைத் தொடங்குவதற்காக மாக்சிமிலியான் சுவாமியார் இந்தியாவிற்கு வந்தார். கேரளாவிலுள்ள எர்ணாகுளம் என்ற நகருக்குச் சென்றார். அவரது சகோதரர்கள் அங்குவந்து ஓர் அச்சகத்தை நிறுவி, பத்திரிகை தொடங்குவதென ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்பின் அவர் போலந்துக்குத் திரும்பிச் சென்றார்.

மாக்சிமிலியான் சுவாமியாரின் சகோதரர்கள் இந்தியாவிற்கு வரமுடியாமற் போய்விட்டது உண்மைதான். ஆனால் திண்டுக்கல்லில் ஆங்கிலத்திலும் பதினேழு இந்திய மொழிகளிலும் பிரசுரமாகும் குழந்தைகளுக்குரிய மாதாந்திரப் பத்திரிகையை அச்சிடும் அச்சகம் "புனித மரியன்னை அச்சகம்" என்று அழைக்கப்படுகிறது. அந்த அச்சகத்தின் பாதுகாவரலரான மாக்சிமிலியான் சுவாமியாரின் உருவப்படம் அங்கே தொங்கவிடப்பட்டுள்ளதைக் காணலாம். (தொடரும்)

## இந்த இடத்தில் சிரிக்கவும்

ஒருவன் சேவலொன்றைக் களவெடுத்த பின் மனச்சாட்சி உறுத்தவே குருவிடம் பாவசங்கீர்த்தனம் செய்யச் சென்றான்.

"சுவாமி நான் ஒரு சேவலைக் களவெடுத்துவிட்டேன். வீட்டில் சரியான கஷ்டம். ஆனால் எனக்கு இது பாவமாகப் படுகிறது. என்ன செய்யவேண்டும்" என்று கேட்டான்.

"அதைக் கொண்டுபோய் சொந்தக்காரனிடம் திருப்பிக்கொடு" என்றார் குரு.

"உங்களிடம் தரவா?"

"வேண்டாம் கொண்டு போ"

"சொந்தக்காரனிடம் கொடுக்க அவன் வேண்டாம் என்று சொன்னால்?"

"அப்படியானால் அதை நீ எடுத்துக்கொள்வதில் தவறில்லை"

அன்று மாலை குரு தமது மனைக்குத் திரும்பியபோது அவரது சேவலைக் காணவில்லை.

## யார் இவர்?

சிறு வயதிலே இயேசுவுக்கு என் மீது பிரியமா? என்று தன் தாயிடம் தினம் கேட்டவர். ஐந்து வயதிலே ஒறுத்தல்கள் பல செய்தவர். ஆகாயத்தில் T வடிவில் மின்னிடும் நட்சத்திரங்கள் கண்டு தன்பெயர் வானில் வரையப்பட்டுள்ளது என மகிழ்ந்து துள்ளியவர். பள்ளிக்கூடத்தில் பொறாமை கொண்ட தோழியரின் சுடுசொற்களை நல்மனதோடு பொறுத்து தன் வேதனைகளை இயேசுவின் பாதம் வைத்தவர். மனிதரின் உறவு உலர்ந்துவிடும், இயேசுவின் உறவோ என்றும் நிலைத்திருக்கும் என்று அவரில் எல்லைகடந்த அன்பு கொண்டவர். அன்னையை இழந்தவேளை தேவ அன்னையைத் தன் அன்னையாக ஏற்றவர். பாப்பரசர் 13ம் சிங்கராயரின் விசேட அனுமதியுடன் 16 வயதிலே கார்மேல் மடம் சேர்ந்தவர். கொலைகாரன் ஒருவனின் கதைபடித்து அம்மனிதனின் மனமாற்றத்திற்காக அனுதினமும் செபமும் தபமும் புரிந்தவர். கார்மேல் மட வாழ்விலே வயோதிபத் தாயாரின் கண்டிப்பையும் தண்டிப்பையும் அன்புள்ளத்தோடு ஏற்று அன்புப்பணி புரிந்தவர். எலும்புருக்கி நோயினால் இருபத்திநான்கு வயதிலே இறைபதம் அடைந்தவர்.

யார் இவர்?

*வேதபோதக நாடுகளின் பாதுகாவலி என்று அழைக்கப்படும் குழந்தை யேசுவின் புனித தெரேசம்மாள் தான் இவர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உலகில் நடப்பவை சில...

தொகுப்பு : ஆ. அஜந்

## இயேசுவின் சடலத்தை மூடிய துணி

இயேசுவின் சடலத்தை மூடியிருந்ததாக நம்பப்படும் தூரின் நகரில் உள்ள துணி புனித பூமியில் தயாரிக்கப்பட்டது என்பதற்கு, மேலும் ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக ரொயிட் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. இத்துணி மீது செய்யப்பட்ட மற்றொரு அறிவியல் ஆய்வு, இத்துணி புனிதபூமியில் செய்யப்பட்டது என்பதை உறுதிசெய்வதாக ஜெருசலேம் எபிரேயப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் பேராசிரியர் அவினோன் தெரிவித்துள்ளார்.

இத்துணியை சிலுவைப் போர் வீரர்கள் 14ம் நூற்றாண்டில் புனிதபூமியில் இருந்து பிரான்ஸ் நாட்டுக்கு எடுத்துச்சென்றனர். பின்னர் 1578ஆம் ஆண்டு முதல் இத்தாலியில் உள்ள தூரின் தேவாலயத்தில் இத்துணி பாதுகாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பாவசங்கீர்த்தன அந்தரங்கங்களைக் காப்பாற்ற ஐ. நா. உடன்பாடு

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான ஆயத்த பொறுப்பாண்மைக் குழு தனது அமர்வை முடித்துக்கொண்ட போது பாவசங்கீர்த்தனம் செய்பவருக்கும் குருவுக்கும் இடையிலுள்ள அந்தரங்கத்தைக் காப்பாற்றுதலை தனது விதிகளில் சேர்த்துக்கொண்டது.

வைத்தியருக்கும் வழக்கறிஞருக்கும் அவர்களது சேவை பெறுவோருடனிருக்கும் அந்தரங்கங்களை பற்றிக் கூறும் பகுதியில் குருக்களையும் சேர்க்குமாறு வத்திக்கான் கேட்டதற்கமைய இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் தமது கடமையின் போது அறியவரும் தகவல்கள் குறித்து சாட்சியமளிப்பதில் விலக்குரிமை அளிக்கப்பட்டுள்ளனர்.

## திருக்கல்லறை ஆலயம் பற்றி எச்சரிக்கை

யூபிலி ஆண்டையொட்டி பல்லாயிரம் யாத்திரீகர் ஜெருசலேம் நகரைத் தரிசிக்கவிருக்கின்றனர். அவர்கள் தரிசிக்கப்போகும் திருத்தலங்களுள் ஒன்றான திருக்கல்லறை ஆலயம் பற்றி அதிகாரி ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிறிஸ்து அடக்கம் செய்யப்பட்ட இடமாகக் கருதப்படும் இக்கல்லறை ஆலயம் 15000க்கும் அதிகமான மக்களைக் கொள்ளக்கூடியது. ஆனால் அதற்கு 2 மீற்றர் அகலமுள்ள ஒரேயொரு கதவுதான் உள்ளது. எனவே இவ்வாலயத்தினுள் தீப்பற்றினால் மிகவும் ஆபத்தாகுமென்றும், இதற்கு மேலும் கதவுகள் அமைக்கப்படாவிட்டால் சிறு நெருப்புப்பொறி கூட பெரும் உயிரிழப்புக்குக் காரணமாகு மென்றும் இஸ்ராயேல் மத விவகார அமைச்சு எச்சரித் துள்ளது.

## திண்டிவனம் முப்பணி நிலையத்தின் வெள்ளிவிழா

திண்டிவனத்தில் அமைந்துள்ள தமிழக முப்பணி நடு நிலையம் தனது வெள்ளிவிழாவை அண்மையில் கொண்டாடி யது. விவிலியம், மறைக்கல்வி என்னும் துறைகளில் தமிழக ஆயர்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் வழிநடத்துதலின் கீழ் பாரிய பணிகளை இந்நிலையம் நிறைவேற்றியுள்ளது.

1961ஆம் ஆண்டில் தமிழக மறைக்கல்வி நடுநிலை யம் என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையம் 1974இல் தமிழக முப்பணி நிலையம் என்ற பெயருடன் தனது பணிகளை விரிவுபடுத்திக்கொண்டது. ஆரம்பத்தில் அருட்திரு எட்மண்ட் பெக்கர், சுவாமி அமலோற்பவதாஸ் முதலியோரின் நெறிப்படுத்தலில் பள்ளிகளுக்கும் பங்குகளுக்கும் உரிய மறைக்கல்விப் பாடத்திட்டங்களை வகுத்தது. மறையாசிரியர் களுக்குப் பயிற்சி அளித்தது. இங்கு பயிற்சி பெற்ற மறையாசிரியர்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இலங்கை, மலேசியா போன்ற இடங்களிலும் பணிபுரிகின்றனர்.

மறைக்கல்வி நூல்கள் தயாரித்து வெளியிடப்பட்டன. பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, "சென்று போதியுங்கள்" பாடநூல்கள், "அவர் வளர்க" நூல் வரிசை, ஆகியவற்றை அச்சேற்றியதுடன் எல்லாத் தமிழர்களும் பெருமை கொள்ளும் வகையில் புதிய விவிலிய பொதுமொழிபெயர்ப்பு வெளிவர வழியமைத்தது. "தோழன்" என்ற மாதாந்த இதழையும் வெளியிட்டுவருகிறது. பூந்தமல்லியில் உள்ள புனித பவுல் விவிலிய நிலையத்தில் பொதுநிலையினர் ஓராண்டுகாலப் பயிற்சி பெற்று பணியாளராக உருவாக்கப்படுகின்றனர்.

தனது பலதரப்பட்ட பணிக்கு தொடர்பு சாதனங்களை நன்கு பயன்படுத்திவரும் இந்நிலையம் தனக்கே உரிய சிற்றாலயம், பயிற்சி நிலையம், நவீன அச்சகம், ஒலி ஒளி ஸ்ருடியோ ஆகியவற்றைக் கொண்ட இந்தியாவின் முன்னனி நிறுவனமாகத் திகழ்கின்றது.

## அர்ச்சனைப் பூக்கள் 02



### திருவழிபாட்டில் திருஇசையும் அது படும் பாடும்

**ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம் -**

-அருள்திரு பா. பி. இராஜசிங்கம்

**புதிய ஏற்பாட்டுக் காலத்தில் திருஇசை**

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாடப்பட்டு வந்த முறைமை யேசுவின் வாழ்விலும் பணியிலும் முதன்மை பெற்றன. யேசுவின் வாழ்க்கையிலும் செபக்கூடங்களுக்கு செபிக்கச் சென்ற போது அங்கே அவர் மக்களோடு சேர்ந்து சங்கீதங்களைப் பாடினார். புதிய பாஸ்கா விருந்தாகிய இறுதி இராவுண வின்போது இயேசுவும் தம் சீடர்களோடு இறைபுகழ் பாடினார். (மத். 26: 30, மாற். 14:26) சங்கீதம் 31:50 இல் காணப்படும் வார்த்தையை யேசு சிலுவை மரத்தில் தொங்கிக்கொண்டி ருக்கும் பொழுது சொல்லிச் செபிக்கின்றார். "தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்". (லூக். 23:46) இதேபோன்று மேலும் பல பாடல்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன.

மரியாளின் பாடல் (லூக். 1: 46--55)
விண்ணகத்தூதர் கீதம் (லூக். 2: 13--14)
சிமியோனின் பாடல் (லூக். 2: 29--32)

இந்தப் பாடல்கள் திருச்சபையினால் இன்றுவரை பாடப்பட்டு வருகின்றன. இவை தவிர புனித சின்னப்பரின் திருமுகங்களிலும் புனித அருளப்பரின் திருவெளிப்பாட்டிலும் காணப்படுகின்றன. (பிலி. 2: 6--11, கொலோ. 1: 15--20, 2திமோ. 2: 11--13, திருவெ. 5: 12--13, 15: 3--4, 19: 1--3,5,6--8)

இவற்றையெல்லாம் உற்று நோக்கும் போது இப்பாடல்கள் கிறிஸ்தவ திருமறையிலும் திருச்சபையின் வழிபாடுகளிலும் தொடக்கத்தி லிருந்தே சிறப்பிடம் பெற்றுள்ளன என்பது புலருகின்றது.

(வளரும்)

## இறை தந்தையின் ஆண்டு-1999

அருள்திரு S. R. கொன்சன்ரைன் C.M.F.

அப்பா - தந்தாய் 03

### இயற்கையில் இயங்குபவர்

இயற்கை இயேசுவின் இறையனுபவத்தில் முக்கிய இடம்வகித்தது. இயற்கையின் இயக்கத்திலும், அழகிலும் வளமையிலும் அவர் இறைத் தந்தையின் உடனிருப்பையும் செயல்பாட்டையும் அனுப வித்து அறிந்தார். இயற்கை யில் அவர் கண்ட கடவுள் படைத்தவர் மட்டுமல்ல, உலகை உருவாக்கி உயிர் களுக்கெல்லாம் இருப்பும், இயக்க ஆற்றலும் தந்து அவற்றை விட்டு எங்கோ விண்ணின் தொலைவில் விலகி வாழ்பவரும் அல்ல. மாறாக அவர் இயற்கையில் இருப்பவர். படைப்பு பொருள் களையெல்லாம் அவற்றின் உள்ளுறைந்து இயக்குபவர். அனைத்தையும் பராமரித்துப் பாதுகாக்கும் தந்தையும் அவரே. வானத்து பறவைகள் பறப்பது அவரது ஆற்றலால், வண்ணமலர் செடிகள் பூத் துக் குலுங்குவது அவரது அழகால் கல்லுக்குள் தேரைக் கும் கருப்பை உயிருக்கும் உணவு கிடைப்பது அவரது அன்பால். இதைத்தான் நம் முன்னோரும் "அவன் இன்றி அணுவும் அசையாது" எனக் கூறியுள்ளனர். இயேசுவின் இந்த இறையனுபவம் அவரு டைய மலைப்பொழிவில் மிகச்சிறப்பாக பிரதிபலிக்கி றது. (மத் 6:26-30)

இயேசு உரைத்த பல்வேறு உவமைகளிலும் இயற்கையில் அவர் பெற்ற இறையனுபவம் வெளிப்படு கிறது. அரும்பும் விதைகளில் அறுபது அல்லது நூறு மடங்கு என அவை தரும் விளைச்சலில் வாழ்வளிக்கும் இறைத்தந்தையின் அன்பின் வளமை பொங்கிப் பெருகு வதை அவர் காண்கிறார். (மாற். 4:26-32) சுவை தரும் உப்பில், சுடர்விடும் விளக் கில் அவர் இறையாட்சியின் சிறிய உதயங்களையே அனு பவிக்கிறார். (மத். 5:13-18) இவ்வாறு இயேசு சந்தித்த கடவுள் விண்ணின் இறைவன் மட்டுமல்ல இந்த மண்ணின் அதில் வளரும் மரங்களின், பூக்கும் மலர்களின் கடவுள் அவை 'அனைத்திலும் உடனி ருந்து உரையாடி மனிதருடன் உறவாடும் அன்புத் தந்தை அவர். அவற்றின் வனப்புகள், வளமைகள் எல்லாம் தந்தை யாகிய அவரது அன்பின், அருளின், அரும்பிவரும் அவ ரது ஆட்சியின் வெளிப்பாடு களே.

(தொடரும்)

## யாழ்ப்பாண மறைசாட்சிகள் 03

### ஒல்லாந்தர் காலக் கலாபணைகள்

1658இல் யாழ்ப்பா ணத்தைக் கைப்பற்றியதுடன் ஒல்லாந்தர் மேற்கொண்ட முதல் நடவடிக்கை கத்தோ லிக்க மதத்தைத் தடைசெய் தமையாகும். இதனால் கத் தோலிக்க மறைப்பணியாள ரும் நாடுகடத்தப்பட்டனர். கணிசமான தொகையினர் குறிப்பாக அண்மையில் தான் இந்துமதத்தை விட்டுக் கத் தோலிக்க சமயத்தைத் தழு வியோர் திரும்பவும் இந்துக் களாயினர். சிலர் பாதிரி சம யத்தின் பிரிவாகிய "கல்வி னிஸத்தை" ஏற்றுக்கொண்ட னர். கத்தோலிக்க ஆலயங் கள் பாடசாலைகள் போன் றவை ஒல்லாந்த அட்சியாள ரால் கைப்பற்றப்பட்டு "கல்வி னிஸ" செபக்கூடங்களாகவும் நிறுவனங்களாகவும் மாற்றப் பட்டன. ஓரளவு பழைய கட்டடங்கள் இடித்துத்தள்ளப் பட்டன.

படிப்படியாக கடுமை யான தடைச்சட்டங்கள் பிரகட னப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன. 19 செப்டம்பர் 1658இல் பிரகடனப்படுத்தப் பட்ட தடைச்சட்டத்தின்படி ஒரு கத்தோலிக்க குருவுக் குப் பாதுகாப்பளிப்பது மரண தண்டனைக்குரிய குற்றமாகி யது. 01 ஜூலை 1682இல் வெளியான பிறிதொரு சட்டத் தின்படி கத்தோலிக்கர் தமது மதவிடயமாக எந்தவிதமான ஒன்றுகூடல்களிலும் ஈடுபடு வது அல்லது வழிபாடுகளை நடத்துவது தடைசெய்யப்பட் டது. இவற்றில் யாராவது கலந்துகொண்டால் அது முதல் முறையாயின் 100 நிக்ஸ் டொலர்களும் (அந் நாளைய டச்சு நாணயம்) இரண்டாவது முறையாயின் 200 நிக்ஸ் டொலர்களும் தண்டமாகக் கட்டவேண்டும். மூன்றாவது முறையும் கலந்துகொண்டால் இன்னும் கடுமையான தண்டனை வழங் கப்பட்டது. அடுத்து வெளி யிடப்பட்ட சட்டத்தின்படி எவ ரும் கத்தோலிக்க குருக் களிடமிருந்து திருமுழுக்குப் பெறுவது தடைசெய்யப்பட் டது. "கல்வினிஸ" செபக் கூடங்களில் அங்குள்ள போத கர்களால் வழங்கப்படும் திரு முழுக்கு மட்டுமே அங்கீகரிக் கப்பட்டு பதிவேடுகளில் பதி யப்படும். அதுபோல "கல்வி னிஸ" முறைப்படி நடை பெறும் திருமணங்கள் மட் டுமே செல்லுபடியாகும். பிள் ளைகளும் "கல்வினிஸ" பாட சாலைகளுக்கே செல்லவேண் டும். தவறின் பிரம்படி போன்ற கடுமையான தண்டனைகளு க்கு உள்ளாகவேண்டியிருந் தது. எல்லோரும் "கல்வினிஸ" செபக்கூடங்களுக்கு மட்டுமே செல்லவேண்டியிருந்தது.

(தொடரும்)

புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில், ஓவ்செற் முறையில் நான்கு வர்ணத்தில் அழகுற அச்சிடப்பட்ட 10 வகை கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்களை உடன் பெற்றுக்கொள்ளலாம். ஒரு மடலின் விலை ரூ. 10.00 ஆகும். மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு விற்பனைக் கழிவு வழங்கப்படும். வெளிநாட்டு வான்கடிதங்களும் தயாராகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுச் சித்திரம் 4

# பயம்

–வாரணம்பாடி

மின்னல் மின்னியது கண்கள் கூசின
இடி முழக்கம் காதைப் பிளந்தது
நாய்களின் சண்டை, ஊளைச்சத்தம் எரிச்சல் ஊட்டியது
அடுத்த வீட்டு தொலைக்காட்சியும்
இச்சத்தங்களோடு போட்டி போட்டு
என்னை நித்திரை கொள்ள விடாது தடுத்தன
நித்திரையின்றித் தவித்தவேளை
தனிமை என்னைப் பயமுறுத்தியது.
**'அருள்வாக்கு ஒளியில் இனிகோவின் ஆன்மீகப் பயிற்சிகள்'**
என்ற நூலைத் திறந்தேன்
'சாவுக்கு அஞ்சாதே' என்ற மகுடத்தில் சீராக் ஆகமம் 41:1-7
"ஓசாவே! தன் செல்வங்களில் . . . . ."
என்ற பகுதியை வாசித்தேன்
1கொரிந்தியர் 10:8-12 : "அவர்களுள் . . . . . .
மத்தேயு 24:12 : "விழிப்பாயிருங்கள்; எனெனில்
எப்போது உங்கள் ஆண்டவர் வருவார் என்று
உங்களுக்குத் தெரியாது" வாசித்த பின் கண்களை மூடித்
தியானத்தில் மூழ்கிய போது
எண்ண அலைகள் என்னுள் எழுந்து விழுந்தன
என்னை அறியாது அயர்ந்தவேளை
மனத்திரையில் சேம்க்காலை தெரிந்தது
பூரண நிழலில் என் கால்கள் அங்கு சென்றன
வாசலுக்கு நேரே சிலுவையில் தொங்கும்
இயேசுவின் உடல் நிலவெளியில் மின்னியது
சிலுவையடியில் வெள்ளையங்கி அணிந்த உருவம்
கைவிரித்து முழங்காலில் இருந்தது
வலக்கையில் செபமாலை தொங்கியது
வெள்ளை அங்கியில் சுருண்டு கிடக்கும்
கறுப்புப் பட்டி அணிந்த உருவம்
என் அசைவு கண்டு திரும்பியது
அவ்வுருவின் அகம் கண்டேன்
என் முகம் மலர்ந்தது, புன்னகை புரிந்தேன்
அவரும் புன்னகையுடன் எழுந்தார்
"வரவேண்டும்! சமரசம் உலாவும் இடத்திற்கு
வந்த நோக்கம் யாதோ?" எனக் கேட்டார்
"நான் அறியேன்! மரண பயத்தில் தவித்தவேளை
என்னையறியாது என் கால்கள் என்னை
இங்கு கொண்டு வந்தன" என்றேன்
"அப்படியா! என் உதவி ஏதும் உமக்குத் தேவையா?"
"எதிர்பாராத உங்கள் சந்திப்பு எனக்கு தெம்பைத் தருகின்றது
உங்களிடம் ஒன்று கேட்கலாமா?"
"பல வருடங்களின் பின் சந்திக்கிறோம். பயமின்றிக் கேளும்"
"எங்கள் மண்ணில் மரணங்கள் மலிந்துவிட்டன.
மனித மாண்பு . . .", என் குரல் உள்ளுக்குள் ஒலித்தது
வெளியே வர மறுத்தது. அவர் என்னைப் பார்த்து
"மலிந்த மரணத்திற்கு எம்மக்கள் சூட்டிய நாமங்களைக் கூறும்"
"இறப்பு, விதைப்பு, விண்ணில், வானுலகில், ஆண்டவன் அழைப்பு,
ஆள்பவன் அழிப்பு, படைத்தவன் பாதம், மாதவன் மடியில் . . .",
"போதும் நிறுத்தும்" என்றவர்
சிறிதுநேரம் மௌனமாகத் தன்னுள் சஞ்சரித்தார்

"மரணங்கள் மலிந்து, மனிதம் தன் மாண்பை இழந்ததற்குக்
காரணம் தன் இலக்கைத் தவறவிட்டதுதான்
இவ்வுலகோடு மனித வாழ்வு முடிந்துவிடும்
என்ற தவிப்புத்தான்; அழியா ஆன்மாவின் பயணம் பற்றி
தெளிவு பிறந்தால் . . ." என்றவர் என்னைப்பார்த்தார்
"அத்தெளிவு பிறக்க என்ன செய்யவேண்டும்?"
அவர் சிலுவையடியில் அமர்ந்தார்
அவர் அருகில் நான் அமர்ந்தேன்
"சொல்லுகிறேன் கவனமாய்க் கேளும்
**நீ யார்?**
**எங்கிருந்து வந்தாய்?**
**எங்கே போகிறாய்?"**
என்றவர் என்னைக் கடைக்கண்ணால் பார்த்தார்
நான் ஒன்றும் புரியாமல் தவித்தேன்
"கவலைப்படாதேயும் 'அகத்தின் அழுக்கை முதலில்
அகற்றிவிடும் அதற்கு இம்மூன்று வினாக்களும் துணைபுரியும்
அடுத்து நான் இவ்வுலகில் ஒரு பயணி
இந்தப் பூவுலக வாழ்க்கையின் இலக்கு நிரந்தர வீடு
நித்திய வாழ்வு என்பதை உறுதியாக உணர
உள்ளத்தில் தெளிவு பிறக்கும்" என்றவர்,
"பயணத்தின் போது பயணப்பாதை நன்கு தெரிந்த
வழித்துணை கிடைத்தால், பயணம் எப்படி இருக்கும்?" என்றார்
"பயணத்தில் பாதுகாப்பு இருக்கும் பயம் இருக்காது
மகிழ்ச்சி இருக்கும் கவலை இருக்காது" என்றேன்
"உங்கள் வழித்துணை யார்?" என்று கேட்டேன்
கையிலிருந்த செபமாலையைக் காட்டி
"இதை நமக்குத்தந்த தேவதாய்" என்றவர்
நான் பார்த்திருக்க காற்றுடன் கரைந்தார்
நான் கண்களைத் திறந்தேன்
உள்ளத்தில் ஒளி பிறந்தது
இலக்குப் புரிந்தது பயம் அகன்றது

## சிந்திக்க ஒரு கதை

# ஆண்டவனின் உருவம்

நாத்திகன் தெருவிலே நடந்துகொண்டிருக்கும் பொழுது ஆலயமணி அடித்தது.

குடியானவன் அவசரம் அவசரமாகக் கோவிலுக்குக் கிளம்பிக்கொண்டிருப்பதைக் கண்ட நாத்திகன் கேட்டான்.

"எங்கே போகிறாய்?"

"கோவிலுக்கு"

"அங்கு என்ன செய்வாய்?"

"ஆண்டவனைப் பிரார்த்திப்பேன்"

"உன் ஆண்டவன் பெரியவரா, சிறியவரா?"

"அண்டசராசரத்தை விடப் பெரியவர்; ஆனால் என் சிறிய இதயத்திற்குள் சிறைப்படும் அளவுக்குச் சிறியவர்"

**ஆண்டவனின் உருவம் என் ஆன்மாவின் அளவைப் பொறுத்தது.**
**உன் உள்ளத்தின் விரிவுதான் இந்த உலகத்தின் விசாலம்.**

## செக்கட்டித்தெரு திருவிழா

கொழும்பு செக்கட்டித் தெரு அன்னை வேளாங் கன்னி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா புரட்டாதி 12ம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திருவிழாத் திருப்பலியும் தேவதாயின் திருச்சுரூபப் பவனியும் சிறப்பாக நடைபெற்றன. இவ்விழாவை பங்கு மேய்ப்புப்பணிக் குழுவும் ஏனைய பங்கு அலகுகளும் பொதுமக்களும் ஒன்றிணைந்து சிறப்பாக நடத்தினர்.

இதற்குமுன் பங்கில் நடைபெற்ற நற்கருணை விழாவை இளைஞர் மன்றத்தினரும், அன்னம்மாள் விழாவை வின்சென்ற் டிபொல் சபையினரும் முன்னின்று நடத்தினர். தேவதாயின் விழாவை மரியாயின் சேனையார் சிறப்புற நடாத்த உதவினர்.

P. ஜோதிமணி

## நெடுந்தீவில் கருத்தரங்கு

"சமூகப் பணிகளும் சமயப் பணிகளும் நல்ல மனிதனை உருவாக்குவதற்காக எடுக்கப்படும் முயற்சிகளே. உடல், உள, ஆன்மீகம் மேம்பட்டாலே ஒரு சமூகம் மேம்பட வழிபிறக்கும். இவற்றில் ஒன்றில் வளர்ச்சி குன்றினாலும் முழு மனித வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படும்"

இவ்வாறு நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு மொண்பேட் அடிகள் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் மனித முன்னேற்ற நடுநிலையத்தால் நடத்தப்பட்ட உள மேம்பாட்டுக் கருத்தரங்கில் குறிப்பிட்டார்.

6ம், 7ம் ஆண்டு மாணவர்களும் உயர்தர வகுப்பு மாணவர்களும் சுய தேடல்களால் தத்தம் ஆற்றல் திறமைகளை இனங்கண்டு தம்மைத் தாமே உணர்ந்துகொள்ளவும் இக்கருத்தரங்கு வழிவகுத்தது.

18ஆம் ஆண்டு நினைவு | முதலாம் ஆண்டு நினைவு





| | |
|---|---|
| தொம்மைப்பிள்ளை சூசைப்பிள்ளை (சின்னத்தம்பு) | சூசைப்பிள்ளை பிறிஜிற்றம்மா (மங்களம்) |
| 04.02.1904 07.12.1981 | 08.10.1914 22.10.1998 |

இரக்கத்தின் தேவனே இவர்கள்மேல் பரிவிரக்கம் கொண்டு இவர்களுடைய பாவங்களை மன்னித்து நித்திய வான்வீட்டை இவர்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை

பிள்ளைகள்,
குடும்பத்தினர்

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
1987
05
07



உதிர்வு
1996
11
08

ஜெ. றோய் மின்ரன்

வானத்தில் ஒளிரும் நிலவைப்போல்
அவரது அரியணை நிலைத்திருக்கும்
சங். 38:37

### செபம்

கருணைக் கடலே இறைவா, 08.11.96 அன்று எம்மை விட்டுப் பிரிந்த ஜெயராஜசிங்கம் றோய் மின்ரனின் ஆன்மா நித்திய சாந்தி பெற்று விண்ணுலக சேனைகளுடன் இணைந்து சதாகாலமும் உம்மைப் போற்றி வாழ்த்தவும், கருணைகூர்ந்தருள வேண்டுமென்று உமது ஏக குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் இறைஞ்சிக் கேட்கின்றோம்.

இவரது ஆன்ம சாந்திக்காக யாழ் அருள் ஆச்சிரமத்தில் 08.11.99 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பெரியமாமா, மாமி,
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணக வாழ்வில் பத்து ஆண்டுகள்



தோற்றம்
22
02
1912

மறைவு
05
11
1988

**P. J. அமிர்தநாயகம்**

(இளைப்பாறிய ஆசிரியர், சம்பத்திரிசியார் கல்லூரி)

பத்து ஆண்டுகளின் முன் உமது உயிரற்ற சடலத்தின் முன் "அப்பா அப்பா" என்று கதறிய அந்தப் பிஞ்சுக் குழந்தை, உமது மடியில் இரு ஆண்டுகள் மட்டுமே பருகிய அந்த ஞானப்பால், நல்ல நிலத்தில் விழுந்த விதையாக ஞானத்திலும் அறிவிலும் அவரை வளர்த்து, காலம் நிறைவுற்ற பொழுது பட்டம் பதவிகளையும் சர்வகலாசாலை அழைப்பையும் குப்பை என உதறிவிட்டு இறைபணிக்குத் தன்னை முற்றாக அர்ப்பணிக்க, நீர் கடந்த பத்து ஆண்டுகளும் விண்ணகத்திலிருந்து அவர் மீது பொழிந்த நல் ஆசியும் பராமரிப்புமே காரணம். தொடர்ந்து அவரை ஓர் உத்தம குருவாக உருவாக்கும் பணியையும் உம்மிடம் நன்றியுடன் ஒப்படைக்கிறோம்.

இவர் மூலம் இறைவன் எம் குடும்பத்திற்கு அளித்த பெரும் கொடைக்கு நன்றிகூறி பின்வரும் ஆலயங்களில் நன்றிப்பலிகள் நிறைவேற்றப்படும். உறவினர்களையும் நண்பர்களையும் எம்முடன் இணைந்து இறைவனுக்கு நன்றிகூற அன்புடன் அழைக்கின்றோம்.

அடைக்கல அன்னை ஆலயத்திலும், அருள் ஆச்சிரமத்திலும் கார்த்திகை 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு (புதிய நேரம்) திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

குடும்ப அங்கத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவு



மண்ணில்
22
02
1947

விண்ணில்
19
10
1998

திரு. ஞானப்பிரகாசம் செல்வஞானம்

(U.N.H.C.R சாரதி)

சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்தின் பின்பும் மறவாதீர்கள்

இவரது ஆன்ம சாந்திக்காக 19.10.99 அன்று காலை 6.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்திலும் சின்னப் பண்டிவிரிச்சான் புனித சவேரியார் ஆலயத்திலும் இரங்கற் பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

91,சின்னப் பண்டிவிரிச்சான்
மடுக்கோவில்

08, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்

இவரது பிரிவால் துயருறும்
அன்பு மனைவி,
பிள்ளைகள்,
தாய், சகோதரர்,
மைத்துனிமார்

## விண்ணக வாழ்வில் நாலாம் வருட நிறைவு



**செல்வி. அருளம்மா மார்க்**

(நவாலி தெற்கு, மானிப்பாய்)

மறைவு : 08.11.1995

பொதுப்பணிகள் பலசெய்து
மக்களின் மனதில் நிறைந்த
உம்மை என்றென்றும் மறவோம்

54, லில்லி அவெனியூ,
வெள்ளவத்தை

திருமதி. லில்லி யேசுதாசன்

## மக்களுடைய . . .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றம் அவசியம். உதாரணத்துக்கு ஆயர் ரொமேரோவை எடுத்துக்கொள்ளலாம். திருச்சபை என்றும் உண்மைக்காக ஓங்கிக் குரல் கொடுக்கவேண்டும். நான் சிறுபான்மையினராக இருந்தால்கூட மனித உரிமைகளுக்காக தாக்கமான பங்களிப்பை வழங்கமுடியும்.

**தோமஸ் அக்குவினாஸ் (Thomas Aquainas)இன் இயற்கைச் சட்டம் (Natural law) என்ற தத்துவத்தின் விசாலிப்பே மனித உரிமைகள் சட்டவியல் (Human Rights Jurisprudence). அப்படி இருந்தும் மனித உரிமைகள் முன்னேற்றத்தில் திருச்சபையின் பணி போதுமானது என்கிறீர்களா?**

திருச்சபை பல இடங்களில் இவ்வாறான பணியில் கூடிய கரிசனை காட்டி வருவது கண்கூடு. பிரதானமாக லத்தீன் அமெரிக்க நாடுகள், பிலிப்பைன்ஸ், கிழக்குத்தீமோர், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் வெவ்வேறு மட்டத்தில் இப்பணிகள் நடைபெறுகின்றன. இதற்கு உதாரணம் பிலிப்பைன்ஸில் 1974ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் தடுப்பு கைதிகள் பணிக்குழு (task Force detainees of the Philippines)

இலங்கையில் உயர் மட்டங்களில் இந்தக் கரிசனை போதுமானதாக இல்லை. இதற்கு ஆழமாக வேர்விட்ட இனத்துவ சிந்தனை தடையாக அமைகிறது. இனத்துவ எல்லைகளைக் கடந்து இலங்கையின் ஒவ்வொரு குடிமனையையும் பாதிக்கும் இந்த மனித சீரழிவுக்கு விடைகாண முற்படவேண்டும்.

**இலவச சட்ட உதவிக்கு உங்களை தொடர்புகொள்ள வேண்டிய முகவரி?**

***அலுவலகம்:***

மனித உரிமைகள் இல்லம்
14, பென்றீவ் காடின்ஸ், கொழும்பு-03
தொலைபேசி : 577962, 075-522495
தொலைமடல் (பக்ஸ்) : 573693

***பிரத்தியேகம் :***

இயேசுசபை இல்லம்
31, கிளிபட் பிளேஸ்
கொழும்பு-04
தொலைபேசி : 01-584755, 504401, 504402

## இளவாலையில் கருத்தரங்கு

இளவாலை மறைப்பங்குகளை உள்ளடக்கிய மறையாசிரியர்களுக்கான கருத்தரங்கினை ஆரம்பித்து உரையாற்றிய பங்குத்தந்தை அருள் திரு அன்ரனிபாலா அவர்கள், "மறையாசிரியர்கள் மறைபணியாளராக விளங்குகின்றனர். பங்குச் சிறார்கள் இறை ஞானத்திலும் சிறந்த மறையறிவிலும் வளர மறையாசிரியர்களின் தன்னலமற்ற சேவையும் மறையியல் பற்றிய ஆழ்ந்த அறிவும் அவசியம்" எனக் குறிப்பிட்டார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் .இடம்பெற்ற மேற்படி கருத்தரங்கில் மறைக்கல்வி கற்பிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டு, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளும் ஆராயப்பட்டன.

செல்வி. அ. டெசி ஜொய்சி

## நெடுந்தீவுப் பங்கில் வாசகர் வட்டம்

நெடுந்தீவுப் பங்கில் பாதுகாவலன் வாசகர் வட்டம் 11.09.99 அன்று உருவாக்கப்பட்டது. இவ்வட்டத்தின் தலைவராக திரு. டொமினிக் யூட்ஸ் கிங், செயலாளராக திரு. அந்தோனிப்பிள்ளை பீலிக்ஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தின் செயற்பாடுகள் பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

தலைவர்: யூட்ஸ் கிங்

## தாளையடி புனித யூதாததேயு ஆலயம்

தாளையடிப் பங்கின் தென்புறத்தில் உள்ள வீரக்கழி ஆற்றின் ஓரத்திலே நெல்லியான் என்னும் கிராமத்தில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய கிறிஸ்தவ குடும்பங்களே வாழ்ந்துவருகின்றன. இக்கிராமத்தைச் சேர்ந்த ஆ. ஆசீர்வாதம் என்பவர் வீரக்கழி ஆற்றோரத்தில் யூதாததேயுவின் சிறிய சுருபம் ஒன்றைக் கண்டெடுத்து அன்றைய பங்குத்தந்தையான அருட்தந்தை இருதயராஜிடம் ஒப்படைத்ததாகவும், யூதாததேயுவுக்கு ஆலயம் அமைப்பதற்குத் தன் காணியின் ஒருபகுதியை அன்பளிப்புச் செய்ததாகவும் கூறப்படுகின்றது.

பங்குத்தந்தை சிறிய குடிசையொன்றை அமைத்து பிரதி வெள்ளிதோறும் நவநாள் செய்வதை ஊக்குவித்தார். தொடர்ந்து வந்த பங்குத் தந்தையர்கள் அங்கு நவநாட் திருப்பலி ஒப்புக் கொடுத்து அப்பகுதி மக்களை விசுவாசத்தில் வேரூன்றச் செய்தனர். அருட்திரு கருணாரட்ணம் பங்குத்தந்தையாக இருந்தபோது, ஆலயத்தைக் கட்டிடமாகக் கட்டி மூன்றுநாள் வழிபாட்டுடன் திருவிழாக் கொண்டாடும் முறையை ஆரம்பித்தார்.

இவ்வருட விழாவானது பங்குத்தந்தை அருட்திரு யோ. பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகள் மறையுரையாற்றி வழிபாடுகளை நெறிப்படுத்தினார். புனித யூதாததேயுவின் சகாயங்களைப் பெற்ற ஏராளமான இந்து மக்களும் விழாவிற்கு வருகைதந்திருந்தனர்.

க. மரியநாயகம் (தாழையடி நிருபர்)

## மறைக்கல்விக் கண்காட்சி

பாண்டியன்தாழ்வு கொய்யாத்தோட்டப் பங்குகளில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த மறைக்கல்விக் கண்காட்சியையும் கலைநிகழ்ச்சிகளையும் பல்வேறு பங்குகளின் மறைக்கல்வி மாணவர்கள் உட்பட பெருமளவு மக்கள் கண்டு களித்தார்கள்.

கண்காட்சியின் விளக்கங்கள் வெறுமனே ஆன்மீகத்தோடு நிற்காமல் சமூகப் பார்வையையும் உணர்வையும் ஊட்டக்கூடிய வகையில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் வழங்கப்பட்டன. கண்காட்சியில் இடம்பெற்றவற்றுள் சில:

- இறையியல் கண்ணோட்டத்துடன் உள்ளடக்கப்பட்ட செம்மணிப் புதைகுழி, வன்னி மற்றும் இன்றைய யாழ்ப்பாண நிலைமைகள்.
- புனித மரியன்னை, புனித அந்தோனியார், புனித அன்னம்மாள், அன்னை திரேசா, ஜோசவ்வாஸ் முனிவர், சமாரியப் பெண் போன்றவர்களைப் போல் உடையணிந்த சிறுவர்கள் அவற்றுக்குரியவர்களைப் பற்றிக் கூறியமை.
- தத்ரூபமாக வடிவமைக்கப்பட்ட நோவாவின் பேழை
- செயல்முறையில் காட்டப்பட்ட ஜெருசலேம் நகரம்
- 'ஐசிங் கேக்' இனால் ஆக்கப்பட்டு பல வர்ணங்களில் பிரித்துக்காட்டப்பட்ட இலங்கையில் 11 மறைமாவட்டங்கள் என்பனவாகும்.

யாழ் மறைமாவட்டத்தில் மிகநீண்ட காலங்களின்பின் பங்கு ஒன்றினால் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கண்காட்சியைத் தொடர்ந்து, மாணவர்கள் மத்தியில் மறைக்கல்வி கற்பதில் புதிய ஆர்வம் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இ. செல்மர் எமில்

## புலம்பெயர்ந்த மக்களின் யாத்திரைகள்

கோடைகால விடுமுறையில் ஐரோப்பிய மக்கள் கடற்கரைகளுக்கும் இயற்கை வனப்புமிக்க இடங்களுக்கும் .உல்லாசப் பிரயாணங்கள் செய்யும் அதேவேளையில் மேல்நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் திருத்தலங்களுக்கு யாத்திரை செய்கின்றார்கள். ஐரோப்பிய ஆன்மீகப் பணியகங்கள் இந்த யாத்திரைகளை ஒழுங்கு செய்கின்றன. செபத்திற்கும் அமைதிக்கும் பொருத்தமான இத்திருத்தலங்கள் இறை அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு துணைபுரிகின்றன. உடல், உள நோய்களைக் குணப்படுத்தி, இறைவனின் திட்டத்தை ஏற்றுவாழ பயிற்சி அளிக்கின்றன. மன்னிப்புப் பெறவும், மன்னிப்பளிக்கவும், நம்பிக்கை பெறவும் இவை உதவுகின்றன.

இந்த யாத்திரைகளின் நோக்கம் தமது வேர்களைத் தெரிந்துகொள்வதும், தமது உடன்பிறப்புக்களை நினைவுகூர்வதும், கூட்டாக எமது விடுதலைக்காக மன்றாடுவதுமாகும்.

பிரான்ஸில் வாழ்ந்து வருபவர்கள் லூர்து பதி, விசியூ, பத்திமா போன்ற இடங்களுக்கும், ஜேர்மனியில் உள்ளவர்கள் கேவலார் என்னும் திருத்தலத்திற்கும், டென்மார்க்கில் தேவதாயின் சமாதானத் திருயாத்திரையும் மேற்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழகத்தில் இரங்கற் திருப்பலி

லயன் எயார் விமான விபத்தில் பலியாகிய பல்தலைக்கழக மாணவிகளான செல்வி. தெரசிற்றா அருள்மணி, செல்வி. இமாக்குலேற்றா பெர்னான்டோ ஆகிய இருவருக்கும் மற்றும் அதில் பயணித்து உயிர்நீத்த அனைவருக்குமாக யாழ் பல்கலைக்கழக நல்லாயன் நடுநிலையத்தில் 29.09.99அன்று அருட்திரு ஜெயசீலன் அடிகள் தலைமையில், நல்லாயன் நிலைய வழிகாட்டி அருட்திரு றெஜிஸ் இராஜநாயகம் அடிகளாரோடு இணைந்து இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அருட்திரு ஜெயசீலன் அடிகள் தமது மறையுரையில் "இவர்களுடைய மரணம் முடிந்துவிட்ட கதையல்ல. மாறாக மூன்றாம் மிலேனியத்தை எதிர்கொள்ள இருக்கும் எமக்குச் செய்திகளை விட்டுச் சென்றுள்ள ஒன்று. மூன்றாம் மிலேனியம் மிகவும் விழிப்பாகவும் பொறுப்பாகவும் நாம் வாழ சவால்கள் பல விடுக்கின்றது" என்று குறிப்பிட்டார். எல்லோரும் மனந்திரும்பும்படி அவர் அழைப்பு விடுத்தார். அன்றைய தினம் இப்போர்க் காலத்தில் வான், தரை, கடல் ஆகியவற்றின் அதிபதிகளை அடையாளப்படுத்தும் மிக்கேல், கபிரியேல், ரபாயேல் சம்மனசுகளின் திருவிழாவும் நினைவுகூரப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

## இறையியல் கோலங்கள் ஆய்வுக் கருத்தரங்கு

காலம் : 31.10.99 (ஞாயிறு)
நேரம் : 10.30 – 12.30வரை
இடம் : யாழ் மறைக்கல்வி நடுநிலையம்

## நிருபர்களுக்கான ஒன்றுகூடல்

பாதுகாவலன் பிரதிநிதிகள், நிருபர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நவம்பர் 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெறும். களப்பயிற்சி அனுபவம் உடுவில் 'ஆர்க்' சிறுவர் இல்லத்தில் இடம்பெறும். அனைவரும் தவறாது 9.30 மணிக்கு (பு.நே.) பாதுகாவலன் பணிமனையில் கூடவும்.

மானிப்பாய்க்கு அண்மையில் உள்ளவர்கள் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வரலாம்.

## குருக்களுக்கான வருடாந்த ஞானொடுக்கம்

மேற்படி ஞானொடுக்கம் நவம்பர் மாதம் 07-13வரை பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெறும்.

## இசை நாடா வெளியீடு

அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளின் குருத்துவ வெள்ளிவிழா நினைவாக திரு. ஏ. ஆர். விஜயகுமார் இசையமைப்பில் உருவான "பனிப்பூக்கள்" என்னும் இசைநாடா நவம்பர் 13ம் திகதி புனித ஹென்றியரசர் கல்லூரியில் வெளியிடப்படும்.

# வறிய நாடுகளை கடன் பளுவிலிருந்து விடுதலை செய்க

## யூபிலி 2000 சர்வதேச அமைப்புக் கோரிக்கை

### பேராயர் டெஸ்மண்ட் டுட்டுவின் திட்டத்திற்கு திருத்தந்தை ஆதரவு

யூபிலி ஆண்டானது யூத மரபில் கடன்களை மன்னிக்கும் ஆண்டாகும். அதே போல் வரப்போகும் 2000வது ஆண்டிலே உலகின் செல்வந்த நாடுகள் சகல வறிய நாடுகளையும் கடன் பளுவிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென யூபிலி 2000 என்னும் சர்வதேச அமைப்பு ஒரு கோரிக்கை விடுத்துள்ளது. இதற்காக பல நாடுகளிலும் இரண்டு கோடி கையொப்பங்களை சேகரித்து வருகிறது. 2000ஆம் ஆண்டு இலங்கைப் பேரணி என்பது இலங்கையில் இதற்கெனச் செயற்படும் குழுவாகும்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் செல்வந்த நாடுகளிடமிருந்து தாம் பெற்ற கடன்களையும் அவற்றுக்குரிய வட்டியையும் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இவ்வறிய நாடுகள் இருக்கின்றன. மேலும் இந் நாடுகள் தாம் பெற்ற கடனை சரிவரப் பயன்படுத்தாததால் போதிய அபிவிருத்தி அடைந்ததாகவும் இல்லை. எனவே இந்தத் தவறுகளையெல்லாம் நீக்கி புதியதொரு ஆரம்பத்திற்காக 2000ஆம் ஆண்டில் இப்புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றது.

வறிய நாடுகள் பெற்றுள்ள கடன்களை இரத்துச் செய்துகொண்டு கடனற்ற சுதந்திர மக்களாக புதிய சகாப்தத்தை எதிர்கொள்ளும் இத்திட்டம் பல பெரியார்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளது. பேராயர் டெஸ்மண்ட் டுட்டுவே இத்திட்டத்தைத் தோற்றுவித்தவர். மேலும் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர், தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, குத்துச்சண்டை வீரர் முகமது அலி, பொப் பிசைப் பாடகர் மைக்கல் ஜக்சன் ஆகியோர் இதற்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

அபிவிருத்திக் கொள்கைகளை மேற்கொள்ளும் போது பொதுமக்களினதும் அவர்களின் அமைப்புக்களினதும் பங்குபற்றலைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்பது இத் திட்டத்தின் ஒரு அம்சமாகும்.

## பாதுகாவலன் நிருபர்கள் எழுத்தாளர்களுக்கான பத்திரிகையியல் தொடர் பயிற்சி

"பத்திரிகையியலுக்கு ஒரு அறிமுகம்" என்ற தலைப்பில் வழங்கப்படும் மேற்படி பயிற்சி மாதத்தின் முதல் சனி ஞாயிறு தினங்களில் இடம்பெறும். யாழ் மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் இப்பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். எழுத்துப்பணியில் ஆர்வமுள்ளவர்கள் பாதுகாவலன் பணிமனையில் 30.11.99க்கு முன் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும். படிவங்கள் அனுப்பவேண்டிய இறுதி நாள் 20.12.99 ஆகும். தெரிவுசெய்யப்படும் 40 பேருக்கு பயிற்சி வழங்கப்படும்.

### அப்பாவி . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை மீறல்கள், அப்பாவி மக்கள் மீது தாக்குதல்கள், போரில் கடைப்பிடிக்கப்படவேண்டிய விதிகளை மீறுதல் போன்ற செயல்களில் அரசு அதிக கவனம் செலுத்தவேண்டும். பள்ளிமுனையில் படுகொலை செய்யப்பட்ட ஐடா காமலீற்றா கொலைச் சந்தேக நபர்கள் இன்னும் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. இது பற்றி மேன்மைதங்கிய ஜனாதிபதிக்கும் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளேன். மன்னாரிலிருந்து சந்தேக நபர்கள் அப்புறப்படுத்தப் பட்டதுடன் விசாரணைக்காக எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை, என்று சுட்டிக் காட்டிய ஆயர் கிருஷாந்தி கொலை வழக்கில் நடந்துகொண்டது போல், இதிலும் பெண்களின் உரிமையையும் மகத்துவத்தையும் நிலைநாட்ட ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

### வன்னிக்கான . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

- மாங்குளத்திலும் வவுனியாவிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டமையால் காட்டு வழியாக நீண்டதூரம் போகவேண்டியுள்ளமை.
- சிறுபோகம் இம்முறை பெரும் தோல்வியாகி விளைச்சல் குறைந்துள்ளமை.
- அரசினால் கொடுக்கப்படும் நிவாரணம் குறைந்த அளவிலேயே கொடுக்கப்படுகின்றமை.
- ஒரு மாதத்தில் செல்லவேண்டிய குறிப்பிட்ட தொகை உணவு லொறிகள் அம்மாதம் கடந்த பின்னர் செல்ல அனுமதிக்கப்படாமை.

### மரியன்னை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தமது முதலாவது மடலில் மாநகரசபை எல்லைக்குள் (நாவாந்துறை தவிர) வதியும் கத்தோலிக்க விசுவாசிகளை இறந்த பின்னர் புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் புதைப்பது மரபு. இது எமது விசுவாசிகளால் மிகவும் புனித பூமியாகப் பூசிக்கப்படும் இடம். இறந்த உற்றார் உறவினரின் கல்லறைகளை தரிசித்துச் செபிப்பது எமது பாரம்பரியம்.

ஆனால் இவ்விடத்தை புனிதமாகப் பேணிப் பாதுகாக்க அயலில் இருப்பவர்கள் இடையூறாக இருப்பதை சகித்துக்கொள்ள முடியாதிருக்கிறது. ஆதலால் காலம் தாழ்த்தாது உரிய நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகிறேன், என்று குறிப்பிட்டுள்ளார்.

### மூன்றாம் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் குண்டுவீச்சு தவறுதலாக நடத்தப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமெனவும், இத்தகைய தவறுகள் இனி நடைபெறாது பார்த்துக்கொள்வதாகவும் வாக்களித்தார்.

சகல விதமான மனித உரிமை மீறல்களையும் அப்பாவிப் பொதுமக்களைத் தாக்குவதையும் தவிர்த்து மனிதாபிமானத்தைக் கடைப்பிடிக்குமாறு தாம் விடுதலைப் புலிகளிடம் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்த ஆயர், யுத்தத்தினால் சமாதானத்தைக் கொண்டுவரமுடியாது என்பதை ஜனாதிபதி உணர்ந்துள்ளார் எனவும், பேச்சுவார்த்தைக்காக அவர் செய்த சில ஆரம்ப முயற்சிகள் கைவிடப்பட்டது வருந்தத்தக்கது எனவும் கூறினார்.

பிரதியமைச்சர், நாட்டைப் பிரிக்காமல் இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வேறு வழி இருக்குமாயின் அரசு அதை ஏற்கத் தயாராயுள்ளது எனவும், தாமும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஆயர் தெரிவித்த விடயங்கள் பற்றி ஜனாதிபதியுடன் பேசுவதாகவும் உறுதியளித்தார்.

கைது செய்யப்பட்டு செப்ரெம்பர் 5ஆம் திகதி முதல் பொலிஸ் காவலில் இருக்கும் மன்னார் அரச அதிபரின் விடுதலையைக் கோரி தாமும் மன்னார் பிரஜைகள் குழுவும் தயாரித்த வேண்டுகோளையும் ஆயர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் ஒப்படைத்தார்.

### திருத்தந்தையின் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமது விஜயத்தின் போது ஆசியாவில் அப்போஸ்தலிக்க ஊக்குவிப்பு (Ecclesia in Asia) என்ற சுற்றுமடலையும் ஆசிய ஆயர் ஒன்றிய அமர்வின் பின்னர் புதுடில்லியில் திருத்தந்தை வெளியிடுவார். ஆசிய ஆயர் பேரவையின் அமர்வை ஹொங்கொங்கில் நடாத்துவதற்கு சீனா அனுமதிக்காததால், மேற்படி அமர்வு இந்தியாவில் நடைபெற விருப்பது குறிப்பிடத்தக்கது.

13 ஆண்டுகளின் பின்னர் இந்திய விஜயத்தை மேற்கொள்ளும் பாப்பரசர் இந்தியப் பிரதமரையும், ஜனாதிபதியையும், இந்திய ஆயர்களையும் சந்திப்பதோடு ஆயர் பேரவையுடன் இணைந்து பொதுமக்களுக்கான கூட்டுத் திருப்பலியையும் ஒப்புக் கொடுப்பார்.

## மடுஅன்னைக்கு புதியகூடு

மடுத்திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் தேவதாயின் புதுமைமிக்க திருச்சுரூபம் பல நூற்றாண்டு பழமையானது. ஒரு தேசிய பொக்கிஷமாகப் போற்றப்படுவது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த் இத் திருச்சுரூபத்தை பாதுகாப்பதற்காக டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன என்னும் ஐ.தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிங்கப்பூரிலிருந்து பெற்ற மிக உறுதிவாய்ந்த குண்டு துளைக்காத கண்ணாடியால் அமைக்கப்பட்ட கூடொன்றை நன்கொடையாக அளித்துள்ளார். திருப்பதியின் பாரம்பரிய முறையின்படி இந்த அன்பளிப்பு நடத்தப்பட்டு தேவதாயின் திருச்சுரூபம் அதில் வைக்கப்படும்.

## பாதுகாவலன் கிறிஸ்து பிறப்புவிழா சிறப்பிதழ்

**கருப்பொருள்: 'ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்க'**

கிறிஸ்து பிறப்புவிழா சிறப்பிதழுக்கான ஆக்கங்களை நேயர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். கட்டுரைகள், கவிதைகள், கதைகள் புனித ஆண்டின் கருப்பொருளைச் சார்ந்தனவாக இருப்பது விரும்பத்தக்கது. உங்கள் ஆக்கங்களை 15.11.99க்கு முன் எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறோம்.

## வெளிநாட்டு வாசகர்களுக்கு

தற்போது பாதுகாவலன் வாசகர்கள் பலர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளனர். ஆயினும் பாதுகாவலனை பெற்றுச் செய்திகளை அறிந்து கொள்ளவும் பிறந்த மண்ணின் திருச்சபையோடு தொடர்பாக இருக்கவும் விரும்புகின்றனர். ஆகவே பாதுகாவலனை தமக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுள்ளனர். சில இடங்களில் குறிப்பாக, கனடாவில் சந்தா சேர்த்து விலாசவிபரத்துடன் அனுப்பியுள்ளமை எமக்கு பெருமகிழ்ச்சி தருகின்றது. உங்கள் செய்திகளையும் ஆக்கங்களையும் வரவேற்கின்றோம்.

## பாதுகாவலன் சந்தா விபரம்

**கனடா**
தனிப்பிரதி ரூபா 30
வருட சந்தா ரூபா 750

**பிரித்தானியா**
தனிப் பிரதி ரூபா 28
வருட சந்தா ரூபா 700

**தென் கொரியா**
தனிப் பிரதி ரூபா 28
வருட சந்தா ரூபா 700

**இந்தியா**
தனிப்பிரதி ரூபா 22
வருட சந்தா ரூபா 500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197